# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2019

# 33 - கணக்கீடு

## புள்ளி வழங்கும் திட்டம்

## புதிய பாடத்திட்டம்

| | | |
|---|---|---|
| **பத்திரம் I** | **:** | **4 x 50 = 200** |
| **பத்திரம் II** | **:** | **= 200** |
| **மொத்தம்** | | **400** |

**இறுதிப் புள்ளி** $= 400 \div 4$

$= 100$

AL/2019/33/T-I(NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

22.08.2019 / 0830 – 1030

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ✳ 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ✳ ஒவ்வொரு வினாவுக்கும் **சமனான** புள்ளிகள் உரித்தாகும்.
- ✳ உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

சுட்டெண் : ................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** பின்வரும் கூற்றுக்களில் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தினை **மிகச் சிறப்பாக** விபரிக்கின்றது?
(1) நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களைக் கணக்குப் புத்தகங்களில் பதிதல்
(2) நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களைப் பதிதல்
(3) கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்
(4) முகாமையாளர்களின் பாவனைக்காக நிறுவனத்தின் நிதித் தகவல்களைத் தொடர்பாடல் செய்தல்
(5) நிறுவனத்தின் அக்கறையுடைய தரப்பினரின் தீர்மானம் எடுத்தலுக்காக தகவல்களைத் தொடர்பாடல் செய்தல் (……)

**2.** கணக்கீட்டுச் செயன்முறையில் காணப்படும் பின்வரும் படிமுறைகள் இடம்பெறும் **சரியான** ஒழுங்குவரிசை எது?
A - பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்துதல்
B - கொடுக்கல்வாங்கல்களுக்கான மூல ஆவணங்களைத் தயாரித்தல்
C - கொடுக்கல்வாங்கல்களை மூலப் பதிவேடுகளில் பதிதல்
D - பரீட்சை மீதியைத் தயாரித்தல்
E - நாட்குறிப்புப் பதிவுகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்

(1) B, C, A, E, D (2) B, C, E, A, D (3) B, C, E, D, A
(4) C, B, E, A, D (5) C, B, D, E, A (……)

● **3, 4, 5 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

சாந்தன் என்பவர் 01.01.2019 இல் ரூ. 750 000 காசினை முதலிட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்ததுடன் 2019 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் அங்கு இடம்பெற்றுள்ளன.

| திகதி | விபரம் |
|---|---|
| 10.01.2019 | ஜெயம் வியாபாரிகளிடமிருந்து கடனுக்கு ரூ. 500 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 12.01.2019 | ஜெயம் வியாபாரிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 50 000 பெறுமதியான பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன. |
| 15.01.2019 | ரூ. 400 000 கிரயமான பொருட்கள் சீமான் என்பவருக்கு ரூ. 600 000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது. |
| 24.01.2019 | ஜெயம் வியாபாரிகளுக்குச் செலுத்த வேண்டிய முழுத்தொகையும் ரூ. 5 000 கழிவு பெற்றதன் பின்னர் கொடுத்துத் தீர்க்கப்பட்டது. |

[பக். 2 ஐப் பார்க்க

3. ஜெயம் வியாபாரிகளுடன் மேற்கொண்ட கொடுக்கல்வாங்கல்களை அவை நிகழ்ந்த ஒழுங்குவரிசையின் அடிப்படையில் சாந்தன் வியாபாரத்தின் புத்தகங்களில் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்கள்:
(1) பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(2) பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(4) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு(Receipt), கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(5) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு, நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு (……)

4. **12.01.2019** இலிருந்து **24.01.2019** வரை சாந்தன் வியாபாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பதிவேடுகளின் ஒழுங்குவரிசை:
(1) கொள்வனவுத் திரும்பல் நாளேடு, விற்பனை நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(2) கொள்வனவுத் திரும்பல் நாளேடு, காசுப் பெறுவனவுகள் நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(3) பொது நாளேடு, காசுப் பெறுவனவுகள் நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(4) கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(5) கொள்வனவு நாளேடு, காசுப் பெறுவனவுகள் நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு (……)

5. சாந்தன் வியாபாரத்தின் 2019 ஜனவரி மாதத்திற்கான இலாபமும் 31.01.2019 இல் உள்ளவாறான காசு மீதியும் யாவை?

| | மாதத்துக்கான இலாபம் (ரூ.'000) | காசு மீதி (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 200 | 155 |
| (2) | 200 | 905 |
| (3) | 205 | 155 |
| (4) | 205 | 900 |
| (5) | 205 | 905 |

(……)

● **6, 7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வருவன சமீமா வியாபாரத்தின் 2019 மார்ச் மாதத்திற்கான சம்பளப் பட்டியலில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்களாகும். இவ்வியாபாரமானது 01.03.2019 இல் ஆரம்பிக்கப்பட்டது.

| விபரம் | ரூ. '000 |
|---|---|
| மொத்தச் சம்பளம் | 500 |
| கழி : ஊழியர் சேமலாப நிதியத்துக்கான (EPF) ஊழியர் பங்களிப்பு - 10% | 50 |
| தேறிய சம்பளம் | 450 |
| EPF இற்கான தொழில்கொள்வோர் பங்களிப்பு - 15% | 75 |
| ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான (ETF) தொழில்கொள்வோர் பங்களிப்பு - 3% | 15 |

குறித்த மாதத்துக்கான EPF, ETF என்பன அடுத்துவரும் மாதத்தின் 10 ஆம் நாளில் அனுப்பப்படுவதுடன் தேறிய சம்பளமானது அதே மாதத்திலேயே கொடுக்கப்படுகின்றது.

6. 31.03.2019 இல் உள்ளவாறான சமீமா வியாபாரத்தின் மேற்படி கொடுக்கல்வாங்கல்களின் **தாக்கத்தினைப்** பிரதிபலிக்கும் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருவனவற்றுள் எது?

| | சொத்துக்கள் (ரூ.'000) | = | பொறுப்புக்கள் (ரூ.'000) | + | உரிமையாண்மை (ரூ.'000) |
|---|---|---|---|---|---|
| (1) | – 450 | | + 50 | | – 500 |
| (2) | – 450 | | + 140 | | – 590 |
| (3) | – 500 | | – | | – 500 |
| (4) | – 500 | | + 90 | | – 590 |
| (5) | – 500 | | + 140 | | – 640 |

(……)

7. 31.03.2019 இல் முடிவடைந்த மாதத்துக்கான EPF செலவுகள், 31.03.2019 இல் உள்ளவாறான EPF பொறுப்பு ஆகியவற்றைப் பதிவதற்கான **சரியான** இரட்டைப் பதிவு யாது?

| | | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|---|
| (1) | EPF செலவுகள் | 50 | |
| | EPF சென்மதி | | 50 |
| (2) | EPF செலவுகள் | 75 | |
| | EPF சென்மதி | | 75 |
| (3) | EPF செலவுகள் | 125 | |
| | EPF சென்மதி | | 125 |
| (4) | EPF செலவுகள் | 50 | |
| | சம்பளச் செலவுகள் | 75 | |
| | EPF சென்மதி | | 125 |
| (5) | EPF செலவுகள் | 75 | |
| | சம்பளச் செலவுகள் | 50 | |
| | EPF சென்மதி | | 125 |

(……)

[பக். 3 ஐப் பார்க்க

**8.** நிறுவனமொன்றில் கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பிரயோகிப்பது தொடர்பில் பின்வரும் கூற்றுகளுள் எது **சரியானது?**

(1) சாதாரண பங்குதாரருக்கு வழங்கிய பங்கிலாபங்களை, நிறுத்தி வைத்த வருவாய்களில் இருந்து ஒரு கழிப்பனவாகக் காட்டுவதற்கான அடிப்படையை அலகுசார் எண்ணக்கரு வழங்குகின்றது.

(2) வருமதி வருமானங்களை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தொன்றாக வகைப்படுத்துவதற்கான அடிப்படையை முக்கியத்துவ எண்ணக்கரு வழங்குகின்றது.

(3) கடன்கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவை வருமானமொன்றாக இனங்காண்பதற்கான அடிப்படையை இணைத்தல் எண்ணக்கரு வழங்குகின்றது.

(4) கடன்பட்டோருக்குக் கொடுத்த கழிவை செலவொன்றாக இனங்காண்பதற்கான அடிப்படையை தேறல் எண்ணக்கரு வழங்குகின்றது.

(5) நிகழத்தக்க பொறுப்புக்களை நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பொன்றாக இனங்காண்பதற்கான அடிப்படையை முன்னெச்சரிக்கை எண்ணக்கரு வழங்குகின்றது. (......)

**9.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது கிரயம், தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில், நிதிக்கூற்றுகளில் இருப்புகளை இனங் காண்பதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

(1) முக்கியத்துவம், இணைத்தல் எண்ணக்கருக்கள்

(2) இணைத்தல், காலந்தவறாமை எண்ணக்கருக்கள்

(3) முன்னெச்சரிக்கை, தேறல் எண்ணக்கருக்கள்

(4) முன்னெச்சரிக்கை, வரலாற்றுக் கிரயம் எண்ணக்கருக்கள்

(5) முன்னெச்சரிக்கை, இணைத்தல் எண்ணக்கருக்கள் (......)

**10.** நிறுவனமொன்றின் களஞ்சியத்தில் 31.03.2019 இல் ஏற்பட்ட தீயினால் அதன் இருப்புக்கள் முழுவதும் அழிவடைந்தன. 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்காக பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | ரூ. '000 |
|---|---|
| 01.04.2018 இல் உள்ளவாறு இருப்பு - கிரயத்தில் | 750 |
| கொள்வனவுகள் | 1 750 |
| கொள்வனவுத் திரும்பல்கள் | 250 |
| விற்பனைகள் | 2 400 |
| விற்பனைச் செலவுகள் | 300 |

இந்நிறுவனம் கிரயத்தில் 20% இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்கிறது.

காப்புறுதிக் கம்பனியானது 31.03.2019 இல் உள்ளவாறான இருப்புக்களின் கிரயத்தின் 80% இனை செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.

31.03.2019 இல் அழிவடைந்த இருப்புக்களின் கிரயமும் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட இருப்பு நட்டமும் யாவை?

| | அழிவடைந்த இருப்புக்களின் கிரயம் (ரூ. '000) | இருப்பு நட்டம் (ரூ. '000) |
|---|---|---|
| (1) | 250 | 50 |
| (2) | 250 | 200 |
| (3) | 330 | 66 |
| (4) | 500 | 100 |
| (5) | 500 | 400 |

(......)

● **11, 12 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவலைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் சத்துரிக்கா வியாபாரிகளின் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான வரைபு நிதிக் கூற்றுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும்.

| | ரூ. '000 |
|---|---|
| மொத்த இலாபம் | 850 |
| நிர்வாகச் செலவுகள் | 275 |
| விநியோகச் செலவுகள் | 200 |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள் | 100 |

எனினும் வரைபு நிதிக்கூற்றுகளைத் தயாரித்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- 31.03.2019 இல் உள்ளவாறு சென்மதிகளான காரியாலய உத்தியோகத்தர் சம்பளங்கள் ரூ. 30 000, விற்பனைத் தரகு ரூ. 20 000 ஆகியவை கணக்கு வைக்கப்படவில்லை.
- முற்பணமாகச் செலுத்திய கட்டட வாடகை ரூ. 40 000 ஆனது நிர்வாகச் செலவொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது.
- மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வு ரூ. 50 000 ஆனது விநியோகச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாகனங்கள் காரியாலய உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்தினை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

[பக். 4 ஐப் பார்க்க

**11.** தேவையான சீராக்கங்களைச் செய்த பின்னர், 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான **சரியான** நிர்வாக, விநியோகச் செலவுகள்:

| | நிர்வாகச் செலவுகள் (ரூ.'000) | விநியோகச் செலவுகள் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 265 | 170 |
| (2) | 265 | 220 |
| (3) | 285 | 170 |
| (4) | 315 | 170 |
| (5) | 315 | 220 |

(……)

**12.** தேவையான சீராக்கங்களைச் செய்த பின்னர், 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம்:

(1) ரூ. 215 000 (2) ரூ. 225 000 (3) ரூ. 265 000
(4) ரூ. 275 000 (5) ரூ. 285 000 (……)

**13.** உற்பத்தி நிறுவனமொன்றின் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான மூலக் கிரயம், மொத்த உற்பத்திக் கிரயம் என்பன முறையே ரூ. 900 000, ரூ. 1 600 000 ஆகும். உற்பத்திக் கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள நடைமுறை வேலைகளின் இருப்புக்கள் 31.03.2018, 31.03.2019 இல் முறையே ரூ. 200 000, ரூ. 330 000 ஆக இருந்தன.

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம் யாது?

(1) ரூ. 570 000 (2) ரூ. 700 000 (3) ரூ. 830 000 (4) ரூ. 900 000 (5) ரூ. 1 030 000 (……)

**14.** நலன்புரிச் சங்கமொன்று 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தில் 150 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 2 000 ஆகும். பின்வருவன 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்காகச் சங்கத்தினால் பெறப்பட்ட காசு விபரங்கள் ஆகும்.

- நடைமுறை ஆண்டுக்கான சந்தா ரூ. 200 000
- நன்கொடை ரூ. 250 000
- 31.03.2018 இல் முதிர்ச்சியடைந்த நிலையான வைப்புக்களிலிருந்து பெற்ற பணம் ரூ. 560 000 (இதில் ரூ. 60 000 ஆனது வட்டி வருமானத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அது 31.03.2018 இல் உள்ளவாறு வருமதி வட்டி வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது.)

நன்கொடை பெறப்பட்ட வருடத்திலிருந்து 5 வருட காலத்துக்குச் சமமான தொகைகளில் வருமானங்களாக இனங்காண்பது நலன்புரிச் சங்கத்தின் கொள்கையாகும்.

மேற்படி கொடுக்கல்வாங்கல்களினால் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட்ட வருமானமும், 31.03.2019 இல் உள்ளவாறான சொத்துக்களில் அதிகரிப்பும்:

| | இனங்காணப்பட்ட வருமானம் (ரூ.'000) | சொத்துக்களில் அதிகரிப்பு (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 310 | 1 110 |
| (2) | 350 | 550 |
| (3) | 350 | 610 |
| (4) | 410 | 550 |
| (5) | 410 | 610 |

(……)

**15.** பின்வரும் கூற்றுகளில் எது பங்குடைமை ஒன்று தொடர்பில் **சரியானது?**

A - இலாபப் பகிர்வு வீதம் மாறும்போது பங்குடைமை ஒன்றின் நன்மதிப்பு மதிப்பிடப்படும்.
B - 1890 பங்குடைமைச் சட்டத்தின் பிரிவு 42 இன்படி பங்குடைமை ஒன்றின் நன்மதிப்பானது மதிப்பிடப்படும்.
C - 1890 பங்குடைமைச் சட்டத்தின் பிரிவு 24 இன்படி பங்காளர்கள் சம்பளத்துக்கு உரித்துடையவர்களல்லர்.
D - 'பற்றுக்களை' பங்குடைமையின் இலாபப் பகிர்வின் ஒரு வழியாக பங்காளர்கள் பயன்படுத்த முடியும்.
E - 1890 பங்குடைமைச் சட்டத்தின் பிரிவு 24 இன்படி பங்காளர்களின் மூலதன மீதிகள் மீது 5% வட்டியானது செலுத்தப்படுதல் வேண்டும்.

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, C, D ஆகியன மாத்திரம்.
(3) B, D, E ஆகியன மாத்திரம். (4) C, D, E ஆகியன மாத்திரம்.
(5) A, C, D, E ஆகிய எல்லாம். (……)

[பக். 5 ஐப் பார்க்க

● **16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

மது, நிலா, ராஜா ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 3 : 2 : 1 எனும் வீதத்தில் பகிர்ந்து பங்குடைமை ஒன்றை நடாத்தினர். 01.04.2018 இல் பங்காளர்களின் மூலதனக் கணக்கு, நடைமுறைக் கணக்கு மீதிகள் பின்வருமாறு காணப்படுகின்றன:

| | மது (ரூ.'000) | நிலா (ரூ.'000) | ராஜா (ரூ.'000) |
|---|---|---|---|
| **மூலதனக் கணக்குகள்** | 3 000 | 2 000 | 1 000 |
| **நடைமுறைக் கணக்குகள்** | 400 | 200 | 100 |

பங்குடைமையானது 31.03.2019 இல் முடிவடையும் வருடத்துக்காக ரூ. 600 000 இலாபத்தை ஈட்டியுள்ளது. 31.03.2019 இல் ராஜா பங்குடைமையில் இருந்து இளைப்பாறியுள்ளதுடன் அவருக்கு இத்திகதியில் செலுத்த வேண்டியிருந்த ரூ. 1 500 000 ஆகிய முழுத் தொகையும் கடன் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. இத்திகதியில் இருந்து மது, நிலா ஆகியோர் பங்குடைமையின் இலாப நட்டங்களை முறையே 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து தொடர்ந்து நடாத்தினர். பங்குடைமையின் நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்யப்படுவதுடன் பங்குடைமையில் நன்மதிப்புக் கணக்கானது பராமரிக்கப்படுவதில்லை.

**16.** 31.03.2019 இலுள்ளவாறான பங்குடைமையின் நன்மதிப்பின் பெறுமதி யாது?
(1) ரூ. 300 000 (2) ரூ. 400 000 (3) ரூ. 500 000 (4) ரூ. 1 500 000 (5) ரூ. 1 800 000 (......)

**17.** நன்மதிப்புச் சீராக்கத்தினால் மது, நிலா ஆகியோரின் 31.03.2019 இலுள்ளவாறான மூலதனக் கணக்கு மீதிகளின் மீதான **தேறிய தாக்கம்** யாது?

| | மது | நிலா |
|---|---|---|
| (1) | தாக்கம் இல்லை. | தாக்கம் இல்லை. |
| (2) | தாக்கம் இல்லை. | ரூ. 300 000 இனால் அதிகரிக்கும். |
| (3) | ரூ. 300 000 இனால் குறையும். | தாக்கம் இல்லை. |
| (4) | ரூ. 300 000 இனால் குறையும். | ரூ. 300 000 இனால் அதிகரிக்கும். |
| (5) | ரூ. 300 000 இனால் அதிகரிக்கும். | ரூ. 300 000 இனால் குறையும். |

(......)

**18.** LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) இன்படி பின்வரும் கூற்று / கூற்றுகளுள் எது / எவை **சரியானது / சரியானவை?**

A - நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் சமர்ப்பிக்கும்போதும் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட தத்துவங்கள், அடிப்படைகள், மரபுகள், விதிகள், நடைமுறைகள் ஆகியன கணக்கீட்டுக் கொள்கைகள் எனப்படும்.

B - புதிய தகவல்கள் அல்லது புதிய அபிவிருத்திகளின் காரணமாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

C - முன்னைய காலப்பகுதிக்கான வழுக்கள், நிதிக் கூற்றுக்களின் மூலங்களை அளவீடு செய்வது தொடர்பில் எழும்போது மாத்திரமே அவை முன்னைய காலப்பகுதிக்கு ஏற்ற விதத்தில் திருத்தப்படும்.

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, B ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) A, B, C ஆகிய எல்லாம். (......)

**19.** LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி பின்வரும் கூற்று / கூற்றுக்களுள் எது / எவை **சரியானது / சரியானவை**?

A - பெறுமானத்தேய்வு என்பது சொத்தொன்றின் பெறுமானத்தேய்விடத்தக்க தொகையினை அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் முறையாக ஒதுக்கீடு செய்தலாகும்.

B - பெறுமானத்தேய்விடத்தக்க தொகை என்பது சொத்தொன்றின் கிரயம் அல்லது கிரயத்துக்காக மாற்றீடு செய்யப்பட்ட வேறு தொகையிலிருந்து எஞ்சிய பெறுமதியைக் கழித்து வரும் தொகையாகும்.

C - நிறுவனமொன்றினால் சொத்தொன்றின் பாவனைக்காகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் காலம் பயன்தரு ஆயுட்காலம் ஆகும்.

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, B ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) A, B, C ஆகிய எல்லாம். (......)

**20.** நேத்ரா PLC ஆனது உற்பத்தியில் பயன்படுத்துவதற்காக 01.03.2019 இல் ரூ. 2 000 000 ஐச் செலுத்தி இயந்திரமொன்றை இறக்குமதி செய்தது. இது தொடர்பில் பின்வரும் செலவுகளும் கம்பனிக்கு ஏற்பட்டன.

| | ரூ.'000 |
|---|---|
| இடத்தைத் தயார்படுத்துதல் | 160 |
| இயந்திரத்துக்கான மின்விநியோக இணைப்புக் கட்டணங்கள் | 10 |
| ஆரம்ப பரீட்சார்த்த ஓட்டத்துக்கான கிரயம் | 20 |
| உற்பத்திப்பொருளின் தரத்துக்கான விளம்பரக் கிரயம் | 60 |
| இயந்திரப் பாவனையைத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெறுவதற்குச் செலுத்திய அனுமதிப் பத்திரக் கட்டணம் | 30 |
| இயந்திரத்தின் பாவனையைத் தொடங்குவதற்காக நடைபெற்ற விழாவுக்கான கிரயம் | 40 |

LKAS 16 (பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்) இன்படி, இயந்திரத்தின் இனங்காணலின்போது அதன் கிரயம் யாது?
(1) ரூ. 2 160 000 (2) ரூ. 2 180 000 (3) ரூ. 2 210 000 (4) ரூ. 2 220 000 (5) ரூ. 2 260 000 (......)

[பக். 6 ஐப் பார்க்க

**21.** தாரகன் PLC இன் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களுக்கு இயக்குனர்களினால் 20.06.2019 இல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் 31.03.2019 இற்கும் 20.06.2019 இற்கும் இடையே இடம்பெற்றுள்ளன.

A - 31.03.2019 இலுள்ளவாறு ரூ. 500 000 செலுத்த வேண்டிய வியாபாரக் கடன்பட்டோர் ஒருவர் 28.05.2019 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

B - 31.03.2019 இலுள்ளவாறு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் பங்குகளது முதலீட்டுப் பெறுமதியானது 20.06.2019 இல் ரூ. 1 000 000 ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

C - 05.04.2019 இல் கம்பனிக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பானது 01.06.2019 இல் வழங்கப்பட்டதுடன் அரசாங்கத்துக்கு ரூ. 4 000 000 தண்டப்பணம் செலுத்தும்படி கட்டளை இடப்பட்டுள்ளது.

LKAS 10 ( அறிக்கையிடல் காலத்துக்குப் பின்னரான நிகழ்வுகள்) இன்படி, கம்பனியின் 31.03.2019 இலுள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் மேலேயுள்ள எந்த நிகழ்வு / நிகழ்வுகள் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்?

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, B ஆகியன மாத்திரம்.
(4) A, C ஆகியன மாத்திரம். (5) B, C ஆகியன மாத்திரம். (……)

**22.** LKAS 2 (இருப்புக்கள்) இன்படி, இருப்புக்களின் கிரயத்தைத் தீர்மானிக்கும்போது பின்வரும் கிரய உருப்படி /உருப்படிகளுள் எது / எவை **உள்ளடக்கப்படுவதில்லை?**

A - மூலப்பொருட்கள், ஊழியம் அல்லது ஏனைய உற்பத்திக் கிரயங்களுடன் தொடர்புடைய விதத்தில் வீணாக்கப்பட்ட அசாதாரண தொகை

B - முடிவடைந்த பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கும் வரைக்குமான களஞ்சியப்படுத்தற் கிரயங்கள்

C - காட்சியறைகளின் நிர்வாக மேந்தலைக் கிரயங்கள்

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, B ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) A, B, C ஆகிய எல்லாம். (……)

● **23, 24 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் சாரங்கன் PLC நிறுவனத்தின் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையனவாகும்.

| **விபரம்** | **ரூ. '000** |
|---|---|
| விற்பனை | 950 |
| மொத்த இலாபம் | 450 |
| நிர்வாக மற்றும் விநியோகச் செலவுகள் | 250 |
| காணிக்கான மீள்மதிப்பீட்டு மிகை | 150 |
| மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு மிகை | 75 |

காணியானது முதற் தடவையாகவும் மோட்டார் வாகனங்கள் இரண்டாவது தடவையாகவும் இவ்வருடத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. 31.03.2017 இல் மோட்டார் வாகனத்துக்கு முதற் தடவையாகச் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டினால் ரூ. 35 000 மீள்மதிப்பீட்டுக் குறை ஒன்று ஏற்பட்டுள்ளது. இக்கம்பனியானது முழுமையாக உரிமையாண்மையின் மூலம் நிதியிடப்பட்டுள்ளதுடன் இக்கம்பனிக்கு வருமான வரிவிலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

**23.** 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்காக கம்பனியால் இனங்காணப்பட்ட மொத்த வருமானமும் மொத்தச் செலவுகளும்:

| | **மொத்த வருமானம் (ரூ.'000)** | **மொத்தச் செலவுகள் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 1 140 | 700 |
| (2) | 1 140 | 750 |
| (3) | 1 175 | 700 |
| (4) | 1 175 | 750 |
| (5) | 1 175 | 785 |

(……)

**24.** கம்பனியின் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபமும் ஏனைய முற்றுமடங்கிய வருமானமும்:

| | **வருடத்துக்கான இலாபம் (ரூ.'000)** | **ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 165 | 225 |
| (2) | 200 | 225 |
| (3) | 200 | 190 |
| (4) | 235 | 190 |
| (5) | 235 | 225 |

(……)

[பக். 7 ஐப் பார்க்க

**25.** 31.03.2019 இல் உள்ளவாறான பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றுடன் தொடர்புடையவை ஆகும்.

| | |
|---|---|
| நடைமுறை விகிதம் | 2 தடவைகள் |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூ. 60 000 |
| இருப்புக்கள் | ரூ. 48 000 |

01.04.2018 இல் இருப்புக்கள் ரூ. 32 000 ஆக இருந்தது. மேலும் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான கம்பனியின் விற்பனையானது ரூ. 300 000 ஆக இருந்ததுடன் அதன் மொத்த இலாப விகிதம் 20% ஆகும்.

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இருப்புப் புரள்வு விகிதம் 31.03.2019 இல் உள்ளவாறான விரைவுச் சொத்துக்கள் விகிதம் ஆகியன:

| | **இருப்புப் புரள்வு விகிதம் (தடவைகள்)** | **விரைவுச் சொத்து விகிதம் (தடவைகள்)** |
|---|---|---|
| (1) | 5 | 1.2 |
| (2) | 6 | 1.33 |
| (3) | 6 | 1.2 |
| (4) | 6.25 | 1.33 |
| (5) | 7.5 | 1.2 |

(……)

**26.** சமந்தி PLC இற்காக 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்காக கணிக்கப்பட்ட உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் 20% ஆகும். எனினும், 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை.

A - முதற் தடவையாக கட்டடத்தினை மீள்மதிப்பீடு செய்தததன் மூலம் ஏற்பட்ட ரூ. 500 000 மிகை

B - ரூ. 800 000 ஒதுக்கங்களை மூலதனமாக்கல்

C - ரூ. 200 000 கொள்வனவுத் திருப்பம்

மேற்படி எக்கொடுக்கல்வாங்கல் / கொடுக்கல்வாங்கல்கள் கம்பனியின் உரிமையாண்மை மீதான திரும்பல் வீதத்தை **அதிகரிப்பதற்கு** வழிவகுக்கும்?

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) C மாத்திரம்.
(4) A, B ஆகியன மாத்திரம். (5) B, C ஆகியன மாத்திரம். (……)

**27.** அம்மாச்சி PLC ஆனது வருடாந்தம் உற்பத்திப்பொருளொன்றின் 50 000 அலகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. அலகொன்றுக்கான மூலக்கிரயம் ரூ. 20 என்பதுடன் இது மாறும் கிரயங்களை மாத்திரம் உள்ளடக்கியிருந்தது. 50 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் உற்பத்தி மேந்தலைக் கிரயம், உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயம் என்பன முறையே ரூ. 2 000 000, ரூ. 1 500 000 ஆகும். கம்பனியின் நிலையான கிரயங்கள், மொத்த மேந்தலைக் கிரயங்களின் 60% ஆகும்.

இவ்வுற்பத்திப்பொருளின் அலகொன்றுக்கான மொத்தக் கிரயம், அலகொன்றுக்கான மாறும் கிரயம் ஆகியன யாவை?

| | **அலகொன்றுக்கான மொத்தக் கிரயம் (ரூ.)** | **அலகொன்றுக்கான மாறும் கிரயம் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 36 | 30 |
| (2) | 70 | 48 |
| (3) | 90 | 30 |
| (4) | 90 | 40 |
| (5) | 90 | 48 |

(……)

**28.** தனி உற்பத்திப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றில் X, Y எனும் இரண்டு உற்பத்திப் பகுதிகள் காணப்படுகின்றன. பின்வரும் தகவல்கள் அந்த இரண்டு உற்பத்திப் பகுதிகளுடன் தொடர்பானவை.

| **உற்பத்திப் பகுதிகள்** | **உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் (ரூ.)** | **தேவைப்படும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| X | 200 000 | 10 000 இயந்திர மணித்தியாலங்கள் |
| Y | 150 000 | 30 000 ஊழிய மணித்தியாலங்கள் |

இவ்வுற்பத்திப்பொருளின் அலகொன்றினை உற்பத்தி செய்வதற்கு ரூ. 50 நேர் மூலப்பொருட்களும் மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 50 வீதமான 4 நேர் ஊழிய மணித்தியாலங்களும் தேவைப்படும். இவ்வுற்பத்திப்பொருளின் அலகொன்றுக்கான மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணிக்கும்போது 2 இயந்திர மணித்தியாலங்களும் 4 ஊழிய மணித்தியாலங்களும் உற்பத்தி மேந்தலைக் கிரயங்களால் உறிஞ்சப்படுகிறது.

இவ்வுற்பத்திப்பொருளின் அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம், உற்பத்திக் கிரயம் ஆகியன:

| | **அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம் (ரூ.)** | **அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 20 | 270 |
| (2) | 25 | 310 |
| (3) | 40 | 290 |
| (4) | 60 | 310 |
| (5) | 60 | 350 |

(……)

[பக். 8 ஐப் பார்க்க

**29.** பின்வரும் கூற்றுக்களில் எவை சமப்பாட்டுப் புள்ளியில் **சரியானவையாகும்?**

A - மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்திற்குச் சமனாகும்.

B - மொத்த விற்பனை வருமானமானது மொத்த நிலையான கிரயத்திற்குச் சமனாகும்.

C - மொத்த நிலையான கிரயம், மொத்த மாறும் கிரயம் ஆகியவற்றின் கூட்டுத்தொகையானது மொத்த விற்பனை வருமானத்துக்குச் சமனாகும்.

D - அலகொன்றிற்கான நிலையான கிரயமானது அலகொன்றிற்கான மாறும் கிரயத்திற்குச் சமனாகும்.

(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) A, B, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகிய எல்லாம். (……)

**30.** செயற்றிட்டம் ஒன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியானது ரூ. 800 000 ஆகும். ஏனைய காரணிகள் மாறாதிருக்கும்போது பின்வருவனவற்றுள் எவை இச்செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதியில் **குறைவினை** ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும்?

A - கழிவீட்டு வீதம் குறைவடைதல்

B - ஆரம்ப முதலீடு அதிகரித்தல்

C - தேறிய செயற்பாட்டுக் காசு உட்பாய்ச்சல் குறைவடைதல்

D - செயற்றிட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான கிரயம் அதிகரித்தல்

(1) A, C ஆகியன மாத்திரம். (2) B, C ஆகியன மாத்திரம்.
(3) A, B, C ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகிய எல்லாம். (……)

……… × 4 = ………… புள்ளிகள்

● **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**31.** பின்வரும் கூற்றுக்கள் வியாபாரமொன்றின் முகாமைக் கணக்கீட்டின் வகிபாகம் தொடர்பில் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| **கூற்று** | **சரி/பிழை** |
|---|---|
| A - முகாமையாளர்களின் பாவனைக்காக பொது நோக்கு நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் | :……… |
| B - கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் | :……… |
| C - நிறுவனத்தின் கடந்தகால எதிர்காலத் தகவல்களை வழங்குதல் | :……… |
| D - நிறுவன முகாமையாளர்களின் வேண்டுதலுக்கமைவாக தகவல்களை உருவாக்குதல் | :……… |

**32.** வியாபாரமொன்றின் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் அதன் உரிமையாண்மையில் **அதிகரிப்பிற்குக்** காரணமாகுமா என்பதனைக் குறிப்பிடுக.
(அதிகரிக்குமாயின் '**√**' எனவும் அதிகரிக்காதாயின் '**X**' எனவும் குறிப்பிடுக.)

| **கொடுக்கல்வாங்கல்** | **உரிமையாண்மையில் அதிகரிப்பு** |
|---|---|
| A - ரூ. 50 000 கிரயமான பொருட்கள் ரூ. 80 000 கடனுக்கு விற்கப்பட்டது. | …………………… |
| B - உரிமையாளர் ரூ. 200 000 பெறுமதியான உபகரணமொன்றை வியாபாரத்துக்கு வழங்கியுள்ளார். | …………………… |
| C - உரிமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து வியாபாரத்தின் கடன் தவணைப் பணமான ரூ. 30 000 ஐச் செலுத்தினார். | …………………… |
| D - கடன்கொடுத்தோர் ஒருவரை கொடுத்துத் தீர்க்கும்போது ரூ. 5 000 காசுக் கழிவாகப் பெறப்பட்டது. | …………………… |

**33.** பின்வரும் ஒவ்வொரு கூற்றினாலும் விபரிக்கப்படும் **மிகவும் பொருத்தமான** கணக்கீட்டுப் பதிவேட்டினைக் குறிப்பிடுக.

| **கூற்று** | **கணக்கீட்டுப் பதிவேடு** |
|---|---|
| A - குறிப்பிட்டதொரு திகதியில் கணக்குகளின் மீதிகளுடன் அவற்றின் முழுமையான பட்டியல் | :…………………… |
| B - நிறுவனமொன்றினால் பேணப்படும் கணக்குகளின் சேர்ப்புக்களை உள்ளடக்கிய பதிவு | :…………………… |
| C - உருப்படி ஒன்றின் இருப்பு மீதியின் அசைவுகளைப் பதியும் ஆவணம் | :…………………… |
| D - காலக்கிரம வரிசையில் ஒரு குறிப்பிட்ட வகை கொடுக்கல்வாங்கல்களைப் பேணும் கணக்குப் புத்தகம் | :…………………… |

[பக். 9 ஐப் பார்க்க

**34.** வியாபாரமொன்றின் 31.03.2019 இல் உள்ளவாறான பரீட்சை மீதியானது சமப்படாதிருந்ததுடன் அவ்வித்தியாசமானது தொங்கற் கணக்குக்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட பரிசீலனையின்போது பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.

A - 2019 மார்ச் மாதத்துக்கான விற்பனை நாளேட்டின் மொத்தம் ரூ. 540 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் விற்பனைகள் கணக்கிலும் ரூ. 450 000 எனப் பதியப்பட்டுள்ளது.

B - கடன்பட்டோருக்குக் கொடுத்த கழிவு ரூ. 10 000 ஆனது கொடுத்த கழிவுக் கணக்கில் ரூ. 1 000 ஆக வரவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தொகையானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளது.

மேலே தரப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக. (விளம்பல் அவசியமில்லை.)

| வழு | விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|---|
| A | ...................................................<br>................................................... | ...................... | <br>...................... |
| B | ...................................................<br>................................................... | ...................... | <br>...................... |

**35.** பின்வரும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு **மிகவும் பொருத்தமான** கணக்கீட்டு எண்ணக்கருவைக் குறிப்பிடுக.

| **கணக்கீட்டு நடவடிக்கை** | **கணக்கீட்டு எண்ணக்கரு** |
|---|---|
| A - விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கு வழங்கப்படும் உத்தரவாதத்துக்கான ஏற்பாட்டினைச் செய்தல் | :................................ |
| B - குத்தகைக்கு எடுத்த கட்டடத்தை குத்தகைக்கு எடுத்தவரின் புத்தகங்களில் சொத்தொன்றாகப் பதிதல் | :................................ |
| C - இலாப நட்டக் கணக்கில் பெறுமானத்தேய்வைச் செலவொன்றாக இனங்காணல் | :................................ |
| D - நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களை நடைமுறை, நடைமுறையல்லாச் சொத்துக்களாகச் சமர்ப்பித்தல் | :................................ |

**36.** தனியுடைமை வியாபாரமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்கள் **சரியா** (**T**) அல்லது **பிழையா** (**F**) எனக் குறிப்பிடுக.

| **கூற்று** | **சரி / பிழை** |
|---|---|
| A - மூலதன முதலீட்டினதும் நிறுத்தி வைத்த வருவாய்களினதும் கூட்டுத்தொகை உரிமையாண்மைக்குச் சமமாகும். | :......................... |
| B - வருமானக் கூற்றானது அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுவதில்லை. | :......................... |
| C - பற்றுக்கள் வருமானக் கூற்றில் செலவொன்றாக இனங்காணப்படும். | :......................... |
| D - உடைமையாளரால் வியாபாரம் செயற்படுத்தப்படுவதனால் முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுவது பயனற்றதாகும். | :......................... |

**37.** பின்வரும் தகவல்கள் 31.03.2019 இல் உள்ளவாறு தனியுடைமை வியாபாரமான அம்மு வியாபாரத்துடன் தொடர்புடையனவாகும்.

| | **ரூ.** |
|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 2 750 000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 1 650 000 |

31.03.2018 இல் உள்ளவாறான இவ்வியாபாரத்தின் உரிமையாண்மை ரூ. 800 000 ஆகும்.
31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர், வியாபாரத்திலிருந்து ரூ. 250 000 ஐப் பற்றியுள்ளதுடன் மேலதிக மூலதனமாக ரூ. 450 000 இனை முதலிட்டுள்ளார்.
பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 31.03.2019 இல் உள்ளவாறான உரிமையாண்மை : ரூ. ................................

(ஆ) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் : ரூ. ................................

[பக். 10 ஐப் பார்க்க

● **38, 39 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

ஆனந்தன், ஜெயந்தன் ஆகியோர் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்று இல்லாது பங்குடைமை ஒன்றை நடாத்தினர். 01.04.2018 இல் ஆனந்தன் தனது சொந்தப் பணத்தைப் பயன்படுத்தி பங்குடைமையின் மோட்டார் வாகனங்களுக்கான காப்புறுதிக் கட்டுப்பணத்துக்காக ரூ. 250 000 ஐச் செலுத்தினார். எனினும் இது 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டபோது சீராக்கம் செய்யப்படாமல் இருந்ததுடன் பங்குடைமையானது ரூ. 562 500 ஐ இலாபமாகப் பதிவுசெய்திருந்தது. பின்னர், ஆனந்தனால் செலுத்தப்பட்ட இத்தொகையானது பங்குடைமைக்கு வழங்கப்பட்டவொரு கடனாக இனங்காண்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**38.** ஆனந்தனால் பங்குடைமை வியாபாரத்துக்கு வழங்கப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணத்தைக் கடனாக இனங்காண்பதற்கும் 31.03.2019 இல் உள்ளவாறு அக்கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டிக்குமான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

| விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| (அ) ..................................................<br>..................................................<br>(ஆனந்தனால் செலுத்தப்பட்ட பங்குடைமை வியாபாரத்தின் காப்புறுதிக் கட்டுப்பணம்) | .................... | .................... |
| (ஆ) ..................................................<br>..................................................<br>(ஆனந்தனால் வழங்கப்பட்ட கடனுக்கான வட்டிச் சென்மதி) | .................... | .................... |

**39.** பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான திருத்திய இலாபம் :ரூ.......................

(ஆ) திருத்திய இலாபத்தின் அடிப்படையில் ஆனந்தனுக்கான இலாபப் பங்கு :ரூ.......................

**40.** நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்கச் சட்டகத்தின்படி கணக்கீட்டுத் தகவல்களின் தரத்தை மேம்படுத்தும் பண்புகள் **நான்கையும்** குறிப்பிடுக.

(1) .............................................. (2) ..............................................

(3) .............................................. (4) ..............................................

**41.** மாலா PLC ஆனது 01.04.2015 இல் ரூ. 1 000 000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இத்தினத்தில் அதன் பயன்தரு ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதி ஆகியன முறையே 5 வருடங்கள், ரூ. 100 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. இவ்வியந்திரத்தின் முக்கிய பகுதியொன்று ரூ. 280 000 கிரயத்தில் 01.04.2018 இல் புனரமைக்கப்பட்டது. இத்தினத்தில் இயந்திரத்தின் எஞ்சிய பயன்தரு ஆயுட்காலம் 4 வருடங்களாகவும் எஞ்சிய பெறுமதி ரூ. 180 000 ஆகவும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

(அ) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான பெறுமானத்தேய்வு : ரூ. .................

(ஆ) 31.03.2019 இல் உள்ளவாறு இயந்திரத்தின் கீழ் கொண்டு செல்லும் தொகை : ரூ. .................

**42.** LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள், நிகழத்தக்க சொத்துக்கள்) இன்படி ஏற்பாடுகள், ஏனைய பொறுப்புக்களின் பண்புகளின் தன்மையைக் குறிப்பதற்குக் கீழே அடைப்புக்குறிக்குள் காணப்படும் **சரியான** சொல்லைத் தெரிவுசெய்க.

| பண்புகள் | ஏற்பாடுகள் | ஏனைய பொறுப்புக்கள் |
|---|---|---|
| A - நிகழ்காலக் கடப்பாடொன்று காணப்படுதல் (**ஆம்/இல்லை**) | .................. | .................. |
| B - கொடுத்துத் தீர்க்கும்போது செலுத்த வேண்டிய தொகை (**நிச்சயமானது/நிச்சயமற்றது**) | .................. | .................. |
| C - கொடுத்துத் தீர்ப்பதற்கான காலம் (**நிச்சயமானது/நிச்சயமற்றது**) | .................. | .................. |

[பக். 11 ஐப் பார்க்க

**43.** SLFRS 16 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய வருமானம்) இன்படி பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) நிறுவனமொன்றின் வருமானத்தை இனங்காணத்தக்க சந்தர்ப்பம்

.....................................................................................................................................

.....................................................................................................................................

(ஆ) 'கொடுக்கல்வாங்கல விலை' என்பதன் வரைவிலக்கணம்

.....................................................................................................................................

.....................................................................................................................................

**44.** 01.04.2018 இலுள்ளவாறு பின்வரும் மீதிகள் நந்தினி PLC இல் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

| | ரூ. '000 |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம் (100 000 சாதாரண பங்குகள்) | 2 000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 800 |

30.09.2018 இல் கம்பனியானது பங்கொன்று ரூ. 20 பிரதிபயனில் ரூ. 400 000 நிறுத்தி வைத்த வருவாயினை மூலதனமாக்கியது. 31.12.2018 இல் கம்பனியானது இத்தினத்தில் 12 பங்குகளுக்கு 1 பங்கு வீதம் பங்கொன்று ரூ. 10 பிரதிபயனில் உரிமை வழங்கலை மேற்கொண்டது. தற்போது காணப்படும் எல்லா பங்குதாரர்களும் உரிமை வழங்கலில் ஈடுபட்டுள்ளனர். 31.03.2019 இல் முடிந்த வருடத்துக்கான இலாபம் ரூ. 300 000 ஆகும்.
பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) மேற்படி பங்கு வழங்கல் காரணமாக காசு மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு : ரூ. ................................

(ஆ) 31.03.2019 இல் உள்ளவாறான உரிமையாண்மை : ரூ. ................................

**45.** நிறுவனமொன்றின் கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| | **கூற்று** | **சரி / பிழை** |
|---|---|---|
| A - | உயர் சரக்குப் புரள்வு வீதமானது குறைந்த சரக்கு வைத்திருக்கும் காலத்தைக் காட்டும். | :........................ |
| B - | கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கும் காசு காரணமாக நடைமுறை விகிதம் குறைவடையும். | :........................ |
| C - | உயர் வட்டிக் காப்பு வீதமானது கடன்களை திருப்பிச் செலுத்தலுக்கான இயலுமையின் குறைவினைக் காட்டும். | :........................ |
| D - | தேறிய தேறக்கூடிய பெறுமதியில் வருட இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பீடானது மொத்த இலாப விகிதத்தில் தாக்கத்தினைச் செலுத்தும். | :........................ |

**46.** பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றினால் விற்பனை செய்யப்படும் பொருளொன்றுடன் தொடர்பானவை.

| **திகதி** | **விபரம்** | |
|---|---|---|
| 01.07.2019 | இருப்பு மீதி | - (அலகொன்று ரூ. 3 வீதம் 1 000 அலகுகள்) |
| 05.07.2019 | கொள்வனவுகள் | - (அலகொன்று ரூ. 4 வீதம் 1 500 அலகுகள்) |
| 12.07.2019 | கொள்வனவுகள் | - (அலகொன்று ரூ. 6 வீதம் 500 அலகுகள்) |
| 28.07.2019 | விற்பனை | - (அலகொன்று ரூ. 10 வீதம் 2 000 அலகுகள்) |

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விலையிடல் முறையின் அடிப்படையிலும் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

| **விலையிடல் முறை** | **2019 ஜூலை மாதத்திற்கான விற்ற சரக்கின் கொள்விலை (ரூ.)** | **31.07.2019 இல் இறுதி இருப்பு (ரூ.)** |
|---|---|---|
| (அ) முதல்-உள் முதல்-வெளி (FIFO) முறை | ..................... | ..................... |
| (ஆ) நிறையிட்ட சராசரி முறை | ..................... | ..................... |

[பக். 12 ஐப் பார்க்க

**47.** கம்பனி ஒன்று தனது உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தும் மூலப்பொருளொன்றின் மறு கட்டளைத் தொகையினைத் தீர்மானிப்பதற்கு சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) மாதிரியைப் பயன்படுத்துகிறது. பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வருடாந்த கேள்வி | - 40 000 அலகுகள் |
| 8 000 அலகுகள் கட்டளைத் தொகையில் வருடாந்த மொத்த கட்டளைக் கிரயம் | - ரூ. 5 000 |
| அலகொன்றிற்கான வருடாந்த வைத்திருத்தற் கிரயம் | - ரூ. 5 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

(அ) கட்டளை ஒன்றுக்கான கட்டளைக் கிரயம் : ரூ. ..........................

(ஆ) சிக்கனக் கட்டளைத் தொகை : ........................ அலகுகள்

**48.** கம்பனி ஒன்று இரண்டு உற்பத்திப் பகுதிகளையும் ஒரு சேவைப் பகுதியையும் கொண்டுள்ளது. சேவைப் பகுதியின் பாதிட்ட மேந்தலைகள் ரூ. 100 000 ஆகும். அது உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையே வேலை செய்த இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மீள் பகிரப்படுகிறது. பின்வரும் மேலதிக பாதிட்ட தகவல்களும் தரப்பட்டுள்ளன.

| | **உற்பத்திப் பகுதி I** | **உற்பத்திப் பகுதி II** |
|---|---|---|
| இயந்திர மணித்தியாலங்கள் | 7 000 | 3 000 |
| அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைகள் | ரூ. 120 | ரூ. 140 |
| அலகொன்றுக்கான செயன்முறைக்குட்படுத்தும் நேரம் | 3 இயந்திர மணித்தியாலங்கள் | 2 இயந்திர மணித்தியாலங்கள் |

உற்பத்தி பகுதி **I** இற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) மீள் பகிரப்பட்ட சேவைத் திணைக்களத்தின் மேந்தலைக் கிரயம் ரூ. ......................

(ஆ) இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதம் ரூ. ......................

(இ) உற்பத்தி பகுதி **II** இற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக மொத்த உற்பத்தி மேந்தலைக் கிரயம் ரூ. ......................

**49.** பின்வரும் தகவல்கள் போட்டிப் பரீட்சை ஒன்றுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட **03 மணித்தியால** கருத்தரங்கொன்று தொடர்பானவையாகும்.

| | ரூ. |
|---|---|
| மண்டப கட்டணம் (மணித்தியாலம் ஒன்றுக்கு) .................................... | 10 000 |
| விரிவுரைக் கட்டணம் (மணித்தியாலம் ஒன்றுக்கு) ................................ | 15 000 |
| விளம்பரச் செலவுகள் .......................................................... | 25 000 |
| பங்குபற்றும் ஒருவருக்கான பாடக்குறிப்புச் செலவுகள் ........................... | 500 |
| பங்குபற்றும் ஒருவரிடமிருந்து அறிவிடப்படும் கருத்தரங்குக் கட்டணம்.............. | 1 500 |

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

(அ) பங்குபற்றும் ஒருவரின் பங்களிப்பு : ரூ. ..........................

(ஆ) கருத்தரங்கின் நிலையான கிரயம் : ரூ. ..........................

(இ) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்குப் பங்குபற்ற வேண்டியவர்களின் எண்ணிக்கை : ..............................

**50.** கம்பனி ஒன்று புதிய செயற்றிட்டம் ஒன்றில் பயன்படுத்துவதற்காக ரூ. 900 000 கிரயத்தில் இயந்திரமொன்றை வாங்க விரும்புகிறது. இவ்வியந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதி ஆகியன முறையே 5 வருடங்கள், ரூ. 100 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்படும் வருடாந்த இலாபம் ரூ. 200 000 ஆகும். இச்செயற்றிட்டத்தின் காசற்ற ஒரே செலவு பெறுமானத்தேய்வுச் செலவு மாத்திரமேயாகும்.

இச்செயற்றிட்டத்தின் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

(அ) கணக்கீட்டுத் திரும்பல் வீதம் (%) : ..............................

(ஆ) திரும்பப் பெறும் காலம் (வருடங்கள்) : ..............................

[ ] புள்ளிகள்

* * *

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - ஆகஸ்ட் 2019

## கணக்கீடு – I (புதிய பாடத்திட்டம்)

| வினா இல. | சரியான விடை |
|---|---|
| 01. | **5** |
| 02. | **2** |
| 03. | **1** |
| 04. | **2** |
| 05. | **5** |
| 06. | **2** |
| 07. | **5** |
| 08. | **1** |
| 09. | **5** |
| 10. | **1** |
| 11. | **4** |
| 12. | **3** |
| 13. | **3** |
| 14. | **2** |
| 15. | **All** |
| 16. | **5** |
| 17. | **3** |
| 18. | **3** |
| 19. | **5** |
| 20. | **4** |
| 21. | **1** |
| 22. | **5** |
| 23. | **4** |
| 24. | **4** |
| 25. | **3** |
| 26. | **3** |
| 27. | **5** |
| 28. | **4** |
| 29. | **2** |
| 30. | **2** |

(ஒவ்வொரு விடைக்கும் **04** புள்ளிகள் வீதம்
மொத்தம் **120** புள்ளிகள்)

31. A – F / பிழை (01) B – F / பிழை (01)
C – T / சரி (01) D – T / சரி (01)

32. A – √ (01) B – √ (01)
C – √ (01) D – √ (01)

33. A – பரீட்சைமீதி (01)
B – பொதுப்பேரேடு (01)
C – சரக்கிருப்புப் பதிவேடு / பந்தாய அட்டை (Bin card) (01)
D – மூலப்பதிவேடு / நாளேடுகள் (01)

34.

| | விபரம் | | வரவு | செலவு | |
|---|---|---|---|---|---|
| A | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு | வரவு | 90 000 | | |
| | விற்பனைக் க/கு | செலவு | | 90 000 | (02) |
| B | கொடுத்த கழிவுக் க/கு | வரவு | 9 000 | | |
| | தொங்கல் க/கு | செலவு | | 9 000 | (02) |

35. A – முன்னெச்சரிக்கை / பாதுகாப்பு (01)
B – தோற்றத்திலும் பார்க்க கருத்துக்கு முக்கியத்துவம் (01)
C – இணைத்தல் (01)
D – தொடர்ந்தியங்கும் (01)

36. A – T / சரி (01) B – F / பிழை (01)
C – F / பிழை (01) D – F / பிழை (01)

37. (அ) ரூ. 1 100 000 (02) (ஆ) ரூ. 100 000 (02)

38.

| | விபரம் | வரவு | செலவு | |
|---|---|---|---|---|
| (அ) | இலாப நட்டக் க/கு (காப்புறுதிக் கட்டணம்) | 250 000 | | |
| | ஆனந்தன் கடன் க/கு | | 250 000 | (02) |
| (ஆ) | இலாப நட்டக் க/கு (ஆனந்தன் கடன் வட்டி) | 12 500 | | |
| | ஆனந்தன் நடைமுறைக் க/கு | | 12 500 | (02) |

39. (அ) ரூ. 300 000 (02) (ஆ) ரூ. 150 000 (02)

40. (1) விளங்கிக் கொள்ளக்கூடிய தன்மை (01)
(2) ஒப்பிடக்கூடிய தன்மை (01)
(3) உறுதிப்படுத்தக்கூடிய தன்மை (01)
(4) காலந்தவறாமை (01)

41. (அ) ரூ. 140 000 (02) (ஆ) ரூ. 600 000 (02)

42.

| | ஏற்பாடுகள் | ஏனைய பொறுப்புக்கள் |
|---|---|---|
| A – | ஆம் | ஆம் |
| B – | நிச்சயமற்றது | நிச்சயமானது |
| C – | நிச்சயமற்றது | நிச்சயமானது |

6 உருப்படி சரியாயின் 4 புள்ளிகள்
4 உருப்படி சரியாயின் 3 புள்ளிகள்
3 உருப்படி சரியாயின் 2 புள்ளிகள்
2 உருப்படி சரியாயின் 1 புள்ளி

43. (அ) நிறுவனமொன்றானது வாடிக்கையாளர் ஒருவருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவையினை வழங்குவதனால் **ஒப்பந்தத்தில் நிறைவேற்றல் கடப்பாட்டில் திருப்தியடையும் போது** அந்நிறுவனமானது வருமானத்தினை இனங்காணலாம். (02)

(ஆ) நிறுவனமொன்று வாடிக்கையாளர் ஒருவருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவையினை வழங்கும் பரிமாற்றத்தின் போது மூன்றாம் தரப்பினர் சார்பாக அறவீடு செய்யப்படும் தொகைகளைத் தவிர **நிறுவனத்திற்கு உரித்துடையதென எதிர்பார்க்கப்படும் பிரதிபயனின் தொகை** கொடுக்கல்வாங்கல் விலை எனப்படும். (02)

44. (அ) ரூ. 100 000 (02) (ஆ) ரூ. 3 200 000 (02)

45. A – T / சரி (01) B – F / பிழை (01)
C – F / பிழை (01) D – F / பிழை (01)

46.

| | 2019 ஜுலை மாதத்திற்கான விற்ற சரக்கின் கொள்விலை (ரூ.) | 31.07.2019 இல் இறுதி இருப்பு (ரூ.) |
|---|---|---|
| (அ) | 7 000 (01) | 5 000 (01) |
| (ஆ) | 8 000 (01) | 4 000 (01) |

47. (அ) ரூ. 1 000 (02) (ஆ) 4 000 அலகுகள் (02)

48. (அ) ரூ. 70 000 (01) (ஆ) ரூ. 40 (01)
(இ) ரூ. 210 000 (02)

49. (அ) ரூ. 1 000 (01) (ஆ) ரூ. 100 000 (02)
(இ) 100 பேர் (01)

50. (அ) 40% (02)

(ஆ) 2½ வருடங்கள் / (02)
2 வருடங்கள் 6 மாதங்கள்

**(80 புள்ளிகள்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல.** | 01 - 30 | = | 120 | புள்ளிகள் |
| | 31 - 50 | = | 80 | புள்ளிகள் |
| | | | 200 | புள்ளிகள் |

9536

AL/2019/33/T-II(NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

26.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ ஒவ்வொரு வினாவுக்கும் **புதிய தாளில்** விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ✳ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- ✳ இவ்வினாத்தாளுக்கு **200** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** சண்முகம் PLC இன் 31.03.2019 இலுள்ளவாறான சுருக்கிய பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **வரவு (ரூ. '000)** | **செலவு (ரூ. '000)** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 90 000 | |
| 01.04.2018 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான திரண்ட பெறுமானத் தேய்வு | | 15 000 |
| விற்பனைகள் | | 88 000 |
| விற்ற சரக்கின் கொள்விலை | 45 000 | |
| இருப்புக்கள் | 4 200 | |
| வியாபார வருமதிகள் | 17 300 | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 19 000 |
| குத்தகைக் கொடுப்பனவுகள் | 3 750 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 750 | |
| 01.04.2018 இல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | | 580 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 45 500 |
| 01.04.2018 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 6 395 |
| நிர்வாகச் செலவுகள் | 4 500 | |
| விநியோகக் கிரயங்கள் | 5 200 | |
| நிதிச் செலவுகள் | 750 | |
| ஏனைய செலவுகள் | 1 800 | |
| செலுத்திய வருமானவரி | 1 950 | |
| 01.04.2018 இல் வருமானவரிக்கான ஏற்பாடு | | 725 |
| | **175 200** | **175 200** |

**மேலதிக தகவல்கள்:**

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

[பக். 2 ஐப் பார்க்க

(i) இயக்குனர்கள் கட்டணமான ரூ. 900 000 ஆனது நிர்வாகச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வுக் கட்டணங்கள் ரூ. 250 000 ஆக இருந்ததுடன், இது வருட இறுதிவரை செலுத்தப்படவோ கணக்கு வைக்கப்படவோ இல்லை.

(ii) வாடிக்கையாளர் ஒருவரால் கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்று தொடர்பில் 10.05.2019 இல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி இத்திகதியில் ரூ. 600 000 இற்கான கோரிக்கையானது வாடிக்கையாளருக்குச் செலுத்தப்பட்டது. இவ்வழக்கானது 01.01.2019 இல் தாக்கல் செய்யப்பட்டதாகும். எனினும், கம்பனியானது இக்கோரிக்கையின் மீது 31.03.2019 வரை ஏற்பாடுகள் எதனையும் இனங்காணவில்லை. கம்பனியின் நிதிக் கூற்றுக்களை 30.05.2019 இல் வெளியிடுவதற்கு இயக்குனர் சபையால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(iii) கம்பனியானது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்தில் விற்பனை செய்வதுடன், கடந்த வருடத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக நடைமுறை வருடத்தில் செலுத்திய உத்தரவாதச் செலவுகள் ரூ. 470 000 ஆகும். இது நடைமுறை வருடத்தின் விநியோகக் கிரயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.03.2019 இல் உத்தரவாதத்துக்கான ஏற்பாடானது ரூ. 650 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(iv) கம்பனியானது 01.04.2018 இல் குத்தகை உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டுள்ளதுடன் மோட்டார் வாகனமொன்றை 5 வருட காலத்துக்குப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுள்ளது. 01.04.2018 இல் மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் கிரயம், பயன்தரு ஆயுட்காலம் என்பன முறையே ரூ. 5 960 000, 5 வருடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. குத்தகை உடன்படிக்கையின்படி 01.04.2018 இல் ஆரம்பக் கொடுப்பனவாக ரூ. 2 500 000 ஐச் செலுத்தியுள்ளதுடன் 31.03.2019 இல் முதலாவது வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணமாக ரூ. 1 250 000 ஐயும் செலுத்தியிருந்தது. குத்தகை ஆரம்ப அளவீட்டின்படி குத்தகைப் பொறுப்பு ரூ. 3 460 000 ஆகும். 31.03.2019 இலும் 31.03.2020 இலும் முடிவடையும் வருடங்களுக்கான குத்தகை வட்டிகள் முறையே ரூ. 346 000, ரூ. 256 000 ஆக இருந்தன. கம்பனியால் செலுத்தப்பட்ட ஆரம்பக் கொடுப்பனவு, முதலாவது குத்தகைத் தவணைக் கட்டணம் ஆகியன மட்டுமே குத்தகைக் கொடுப்பனவுகள் கணக்கில் பதியப்பட்டிருந்தன. இது தொடர்பில் வேறு எதுவித பதிவுகளும் செய்யப்படவில்லை.

(v) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கமும் அவற்றின் திரண்ட பெறுமானத் தேய்வுகளும் பின்வருமாறு:

| **விபரம்** | **31.03.2019 இல் கிரயம்/பெறுமதி (ரூ.'000)** | **01.04.2018 இல் திரண்ட பெறுமானத்தேய்வு (ரூ.'000)** |
|---|---|---|
| காணி | 30 000 | - |
| கட்டடங்கள் | 45 000 | 11 000 |
| காரியாலய உபகரணங்கள் | 15 000 | 4 000 |
| | 90 000 | 15 000 |

(vi) நடைமுறை வருடத்துக்கான பெறுமானத்தேய்வானது இதுவரை செய்யப்படவில்லை. குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட மோட்டார் வாகனமானது விநியோக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் கட்டடங்களும் காரியாலய உபகரணங்களும் நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. காரியாலய உபகரணங்கள் கிரயத்தின் மீது வருடாந்தம் 25% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. மோட்டார் வாகனத்தின் எஞ்சிய பெறுமதி பூச்சியம் ஆகும்.

(vii) நடைமுறை வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பின்வருமாறு:

- 01.07.2018 : காணி ஒன்று ரூ. 10 000 000 கிரயத்தில்
- 01.10.2018 : காரியாலய உபகரணங்கள் ரூ. 5 000 000 கிரயத்தில்

இந்த உருப்படிகள் கணக்குகளில் முறையாகப் பதியப்பட்டுள்ளன.

(viii) கட்டடங்கள் இரண்டாவது தடவையாக 01.04.2018 இல் ரூ. 38 000 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. 31.03.2014 இல் முதற் தடவையாக கட்டடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டபோது ரூ.1 500 000 குறை ஒன்று ஏற்பட்டுள்ளது. இரண்டாவது தடவை மீள் மதிப்பீட்டிற்குப் பின்னர் கட்டடத்தின் எஞ்சிய பயன்தரு ஆயுட்காலமானது 8 வருடங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கட்டடங்களின் எஞ்சிய பெறுமதியானது பூச்சியம் எனக் கொள்க. இரண்டாவது தடவை மீள் மதிப்பீட்டிற்காக எதுவித கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

[பக். 3 ஐப் பார்க்க

(ix) நடைமுறை வருடத்தில் செலுத்திய வருமானவரியானது கடந்த வருடத்துக்காகச் செலுத்திய ரூ. 600 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2019 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த வருமானவரிப் பொறுப்பானது ரூ. 1 920 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(x) செலுத்திய இடைக்காலப் பங்கிலாபமான ரூ. 1 500 000 தொகையானது விநியோகக் கிரயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இயக்குனர்கள் 30.05.2019 இல் பங்குதாரர்களுக்கு ரூ. 1 000 000 இறுதிப் பங்கிலாபத்தினைப் பிரேரித்துள்ளனர்.

**வேண்டப்படுவது:**

LKAS 1 (நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான சண்முகம் PLC இன் பின்வரும் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புகள் உட்பட):

(1) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று

(3) 31.03.2019 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2019

## கணக்கீடு – II (புதிய பாடத்திட்டம்)

**1.** (1) **வரையறுத்த சண்முகம் PLC** (01)

**31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று**

(ரூ. 000)

| | குறிப்பு | | | |
|---|---|---|---|---|
| விற்பனை | | | 88 000 | |
| (–) விற்பனைக்கிரயம் | | | (45 000) | |
| மொத்த இலாபம் | | | 43 000 | |
| விநியோகக் கிரயங்கள் | | (4 962) (04) | | |
| நிர்வாகச் செலவுகள் | | (12 625) (03) | | |
| ஏனைய செலவுகள் | | (900) (02) | | |
| நிதிச் செலவுகள் | | (1 096) (01) | (19 583) | |
| வரிக்கு முன் இலாபம் | 01 | | 23 417 | |
| (–) வருமான வரி | 02 | | (1 795) | (02) |
| வருடத்திற்கான இலாபம் | | (01) | 21 622 | |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | | |
| கட்டட மீள்மதிப்பீட்டு மிகை | | | 2 500 | (01) |
| வருடத்திற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் (01) | | | 24 122 | |

**குறிப்பு 01 :**

**பின்வரும் செலவுகள் கழித்தபின் வரிக்குமுன் இலாபம்** (ரூ. 000)

| | |
|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வு | 7 875 |
| இயக்குநர் கட்டணம் | 900 |
| கணக்காய்வுக் கட்டணம் | 250 |
| வாடிக்கையாளர் இழப்பீட்டு ஏற்பாடு | 600 |
| விற்பனை உத்தரவாத ஏற்பாடு | 540 |
| குத்தகைக் கடன் வட்டி | 346 |
| சொத்து பயன்படுத்தல் உரிமைத் தேய்வு | 1 192 |

**குறிப்பு 02 :**

**வருமானவரி** (ரூ 000)

2018 / 2019

| | | |
|---|---|---|
| மதிப்பிடப்பட்ட வரி | 1920 | 01 |
| மிகை வரி ஏற்பாடு | (125) | 01 |
| | 1 795 | |

**ஏதாவது ஒரு உருப்படிக்கு 01 புள்ளி வீதம்**
**மொத்தம் 02 புள்ளிகள்**

**(18 புள்ளிகள்)**

**செய்கை :** (ரூ. 000)

**1) விநியோகக் கிரயம்**

| | | |
|---|---|---|
| விநியோகக்கிரயம் | 5 200 | |
| இடைக்கால பங்குலாபம் | (1500) | 01 |
| விற்பனை உத்தரவாத ஏற்பாடு | 540 | 01 |
| விற்பனை உத்தரவாத ஏற்பாடு | (470) | 01 |
| சொத்து பயன்படுத்தல் உரி. தேய்வு | 1 192 | 01 |
| | 4 962 | |

**2) நிர்வாக செலவுகள்**

| | | |
|---|---|---|
| நிர்வாக செலவுகள் | 4 500 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 250 | 01 |
| கட்டட பெறுமானத் தேய்வு | 4 750 | 01 |
| காரியாலய உபகரண பெறுமானத் தேய்வு | 3 125 | 01 |
| | 12 625 | |

**3) ஏனைய செலவுகள்**

| | | |
|---|---|---|
| ஏனைய செலவுகள் | 1 800 | |
| வாடிக்கையாளர் இழப்பீட்டு ஏற்பாடு | 600 | 01 |
| கட்டட மீள்மதிப்பீட்டு குறை சீராக்கல் | (1 500) | 01 |
| | 900 | |

**4) நிதிச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| நிதிச் செலவுகள் | 750 | |
| குத்தகை வட்டி | 346 | 01 |
| | 1 096 | |

(2)

**வரையறுத்த சண்முகம் PLC**

**31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று** (ரூ. 000)

| விபரம் | கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறுத்தி வைத்த வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.04.2018 இல் மீதி | 45 500 | | 6 395 | 51 895 |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் (01) | | 2 500 | 21 622 | 24 122 |
| இடைக்காலப் பங்குலாபம் | | | (1 500) (01) | (1 500) |
| 31.03.2019 இல் மீதி | 45 500 | 2 500 | 26 517 | 74 517 |

**(02 புள்ளிகள்)**

(3)

**வரையறுத்த சண்முகம் PLC** (01)

**31.03.2019 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று** (ரூ. 000)

| | | | |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 03 | (01) | 71 125 |
| சொத்து பயன்படுத்தல் உரிமை (Right to use asset) | 04 | (01) | 4 768 |
| | | | 75 893 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | |
| சரக்கிருப்பு | | 4 200 | |
| வியாபார வருமதிகள் | | 17 300 (01) | |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 750 | 22 250 |
| | | | 98 143 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும் :** | | | |
| **உரிமையாண்மை :** | | | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | | 45 500 |
| **ஒதுக்கங்கள் :** | | | (01) |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 2 500 | |
| நிறுத்தி வைத்த வருவாய் | | (01) 26 517 | 29 017 |
| | | | 74 517 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் :** | | | |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | | | 1 562 (01) |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் :** | | | |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | | 994 (01) | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 19 000 | |
| வருமான வரிக்கான ஏற்பாடு | | 570 (01) | |
| ஏனைய கொடுக்குமதிகள் | 05 | 1 500 (03) | 22 064 |
| | | | 98 143 |

**குறிப்பு 03 : ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்** (ரூ. 000)

| விபரம் | காணி | கட்டடம் | காரியாலய உபகரணம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.04.2018 இல் மீதி | 20 000 | 45 000 | 10 000 | 75 000 |
| இவ்வருட சேர்ப்பு | 10 000 (01) | | 5 000 | (01) 15 000 |
| மீள் மதிப்பீடு | | 4 000 (01) | | 4 000 |
| மீள்மதிப்பீட்டுக்காக அகற்றிய திரண்ட பெறுமானத் தேய்வு | | (11 000) (01) | | (11 000) |
| 31.03.2019 இல் மீதி | 30 000 | 38 000 | 15 000 | 83 000 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | |
| 01.04.2018 இல் மீதி | | 11 000 | 4 000 | 15 000 |
| மீள்மதிப்பீட்டுக்காக அகற்றிய தேய்வு | | (11 000) (01) | | (11 000) |
| இவ்வருடத்திற்கான பெறுமானத்தேய்வு | (01) | 4 750 | 3 125 | 7 875 |
| 31.03.2019 இல் மீதி | | 4 750 (01) | 7 125 | 11 875 |
| 31.03.2019 இல் முன்கொண்டு செல் மீதி | 30 000 | 33 250 | 7 875 | 71 125 |

**குறிப்பு 04**

**சொத்து பயன்படுத்தல் உரிமை** (ரூ.'000)

| | | |
|---|---|---|
| ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயம் | 5 960 | (01) |
| திரண்ட பெறுமானத் தேய்வு | (1 192) | |
| | 4 768 | |

**குறிப்பு 05**

**ஏனைய கொடுக்குமதிகள்** (ரூ.'000)

| | | |
|---|---|---|
| அட்டுறு கணக்காய்வுக் கட்டணம் | 250 | 01 |
| விற்பனை உத்தரவாத ஏற்பாடு | 650 | 01 |
| வாடிக்கையாளர் இழப்பீட்டு ஏற்பாடு | 600 | 01 |
| | 1 500 | |

**குறிப்பு 06**

இயக்குனர்கள் 30.05.2019 இல் பங்குதாரர்களுக்கு ரூ. 1 000 000 இறுதிப் பங்கிலாபத்தைப் பிரேரித்துள்ளனர். (01)

**(20 புள்ளிகள்)**

| வினா இல. 01 | (1) | (2) | (3) | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 18 | 02 | 20 | 40 |

2. (அ) XYZ என்ற உற்பத்திப்பொருள் தயாளன் PLC இனால் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வுற்பத்திப்பொருளின் வாராந்த உற்பத்தி 300 அலகுகளில் இருந்து 500 அலகுகள் வரை மாறுபடும். இது இரண்டு வகை மூலப்பொருட்களான A, B ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. ஓர் அலகு XYZ உற்பத்திப்பொருளை உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள் Aஇல் 10 kg உம், மூலப்பொருள் Bஇல் 5 kg உம் தேவைப்படுகின்றது. பின்வரும் தகவல்கள் மூலப்பொருட்கள் A, B ஆகியவற்றுடன் தொடர்பானவை.

| | A | B |
|---|---|---|
| மறு கட்டளைத் தொகை.................... | 20 000 | ? |
| மறு கட்டளை மட்டம்........................ | 18 000 | ? |
| ஆகக்கூடிய இருப்பு மட்டம்................ | ? | 19 000 |
| ஆகக்குறைந்த இருப்பு மட்டம்........... | ? | 5 000 |
| விநியோகக் காலம் (வாரங்களில்): | | |
| ஆகக்குறைந்தது.......................... | 2 | 3 |
| ஆகக்கூடியது............................... | 4 | 5 |

**வேண்டப்படுவது:**

(1) மூலப்பொருள் A இற்கான ஆகக்கூடிய, ஆகக்குறைந்த இருப்பு மட்டங்கள்
(2) மூலப்பொருள் B இற்கான மறு கட்டளை மட்டம், மறு கட்டளைத் தொகை
(3) மூலப்பொருள்கள் A, B ஆகியவற்றுக்கான சராசரி இருப்பு மட்டங்கள்

**(16 புள்ளிகள்)**

(ஆ) குமுதா PLC ஆனது 'ஒன்றிணைத்தல்', 'முடிவுறுத்தல்' எனும் இரண்டு உற்பத்திப் பகுதிகளையும் சேவைப் பகுதியான 'களஞ்சியத்தினையும்' கொண்டுள்ளது. அடுத்த நிதியாண்டுக்கான பாதிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| **விபரம்** | **மொத்தம்** | **ஒன்றிணைத்தல்** | **முடிவுறுத்தல்** | **களஞ்சியம்** |
|---|---|---|---|---|
| மேற்பார்வையாளர்கள் சம்பளம் (ரூ.'000) | 1 690 | 530 | 730 | 430 |
| வாடகை (ரூ.'000) ......................... | 360 | ? | ? | ? |
| மின்சாரம் (ரூ.'000) ........................ | 180 | ? | ? | ? |
| பாதுகாப்புக் கட்டணங்கள் (ரூ.'000) ...... | 240 | ? | ? | ? |
| இயந்திரங்கள் மீதான பெறுமானத் தேய்வு (ரூ.'000) ........................... | ? | ? | ? | – |
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) ................... | 18000 | 9 000 | 6 000 | 3 000 |
| கிலோவாற்று மணித்தியாலங்கள் ........ | 9 000 | 3 000 | 4 500 | 1 500 |
| பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை.. | 12 | 5 | 3 | 4 |
| ஊழிய மணித்தியாலங்கள் .............. | 21000 | 7 000 | 14 000 | – |
| இயந்திர மணித்தியாலங்கள் ............ | 15000 | 12 000 | 3 000 | – |
| மூலப்பொருட்களுக்கான வேண்டுகோள்களின் எண்ணிக்கை.......... | 50 | 30 | 20 | – |

[பக். 4 ஐப் பார்க்க

**மேலதிக தகவல்கள்:**

(i) ஒன்றிணைத்தல், முடிவுறுத்தல் ஆகிய பகுதிகளின் இயந்திரக் கிரயங்கள் முறையே ரூ. 450 000, ரூ. 800 000 ஆகும். கம்பனியானது இயந்திரங்களை வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 20% பெறுமானத்தேய்விடுகின்றது.

(ii) களஞ்சியப் பகுதியின் மொத்த மேந்தலைக் கிரயமானது ஒன்றிணைத்தல், முடிவுறுத்தல் பகுதிகளுக்கிடையே அந்தந்தப் பகுதிகளினால் செய்யப்பட மூலப்பொருள் வேண்டுதல்களின் எண்ணிக்கையின் அடிப்டையில் மீள்பகிரப்படுகிறது.

(iii) ஒன்றிணைத்தற் பகுதியானது இயந்திர மணித்தியாலங்களையும் முடிவுறுத்தற் பகுதியானது ஊழிய மணித்தியாலங்களையும் மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுவதற்காகப் பயன்படுத்துகிறது.

(iv) கம்பனியானது மொத்த உற்பத்திக் கிரயத்தில் 20% இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்கிறது. பின்வரும் விபரங்கள் கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட ABC, PQR ஆகிய உற்பத்திப்பொருட்களுடன் தொடர்பானவையாகும்.

| | ABC (ஓர் அலகு) | PQR (ஓர் அலகு) |
|---|---|---|
| உண்மையாக செலவிட்ட மணித்தியாலங்கள்: | | |
| ஒன்றிணைத்தற் பகுதி (இயந்திர மணித்தியாலம்) | 2 | 4 |
| முடிவுறுத்தற் பகுதி (ஊழிய மணித்தியாலம்) | 3 | 2 |
| உற்பத்தி மேந்தலைக் கிரயம் (ரூ.) | ? | ? |
| மூலக்கிரயம் (ரூ.) | 380 | ? |
| விற்பனை விலை (ரூ.) | ? | 1 200 |

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படையைப் பெயரிட்டு, மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (சேவைப் பகுதியின் மேந்தலைகளின் மீள்பகிர்வு உட்பட)

(2) இரண்டு உற்பத்திப் பகுதிகளுக்குமான மேந்தலை உறிஞ்சுதல் வீதங்கள்

(3) உற்பத்திப்பொருள் ABC இன் அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம், அலகொன்றுக்கான விற்பனை விலை

(4) உற்பத்திப்பொருள் PQR இன் அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம், அலகொன்றுக்கான மூலக்கிரயம்

**(24 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## வினா – 02

(அ) (1) மூலப்பொருள் A இற்கான ஆகக்கூடிய இருப்பு மட்டம் = **32 000 கிலோ** (03)
மூலப்பொருள் A இற்கான ஆகக்குறைந்த இருப்பு மட்டம் = **6 000 கிலோ** (02)

**செய்கை :**

ஆகக்கூடிய இருப்பு மட்டம் = ROL – (இழிவுப் பாவனை X இழிவு விநியோகக் காலம்) + ROQ
= 18 000 [01] – (3 000 X 2) [01] + 20 000 [01]
= 32 000 Kg

ஆகக்குறைந்த இருப்பு மட்டம் = ROL – (சராசரி பாவனை X சராசரி விநியோகக் காலம்)
= 18 000 [01] – (4 000 X 3) [01]
= 6 000 Kg

**(05 புள்ளிகள்)**

(2) மூலப்பொருள் B இற்கான மறுகட்டளை மட்டம் = **12 500 கிலோ** (02)
மூலப்பொருள் B இற்கான மறுகட்டளைத் தொகை = **11 000 கிலோ** (03)

**செய்கை :**

மறுகட்டளை மட்டம் = ஆகக்கூடிய பாவனை X ஆகக்கூடிய விநியோகக் காலம்
= 2 500 [01] X 5 [01]
= 12 500 Kg

**மறுகட்டளைத் தொகை :**

ஆகக்கூடிய இருப்பு மட்டம் = ROL + ROQ – (இழிவுப் பயன்பாடு X இழிவு விநியோகக் காலம்)
19 000 [01] = [01] 12 500 + ROQ – (1 500 X 3) [01]
ROQ = 11 000 Kg

**(05 புள்ளிகள்)**

(3) மூலப்பொருள் A இன் சராசரி இருப்பு மட்டம் = **19 000 / 16 000 கிலோ** (03)
மூலப்பொருள் B இன் சராசரி இருப்பு மட்டம் = **12 000 / 10 500 கிலோ** (03)

**செய்கை :**

**மூலப்பொருள் A**

சராசரி இருப்பு மட்டம் = (ஆகக்கூடிய இருப்பு மட்டம் + ஆகக்குறைந்த இருப்பு மட்டம்) / 2
= ([01] 32 000 + [01] 6 000) / 2 [01]
= 19 000 Kg

அல்லது: (இழிவு மட்டம் + ROQ / 2)
[01] 6 000 + 20 000 [01] / 2 [01]
= 16 000 Kg

**மூலப்பொருள் B**

சராசரி இருப்பு மட்டம் = (ஆகக்கூடிய இருப்பு மட்டம் + ஆகக்குறைந்த இருப்பு மட்டம்) / 2
= (19 000 [01] + 5 000 [01]) / 2 [01]
= 12 000 Kg

அல்லது: (இழிவு மட்டம் + ROQ / 2)
5 000 [01] + [01] 11 000 / 2 [01]
= 10 500 Kg

**(06 புள்ளிகள்)**

**(ஆ)** (1) **மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை** (ரூ. 000)

| **கிரய உருப்படி** | **பகிர்வின் அடிப்படை** | **மொத்தம்** | **உற்பத்திப் பகுதி - ஒன்றிணைத்தல்** | **உற்பத்திப் பகுதி - முடிவுறுத்தல்** | **களஞ்சியம்** | |
|---|---|---|---|---|---|---|
| மேற்பார்வையாளர் சம்பளம் | நேரடி ஒதுக்கீடு | 1 690 | 530 | 730 | 430 | (01) |
| வாடகை | தளப்பரப்பு (சதுர மீற்றர்) (01) | 360 | 180 | 120 | 60 | (01) |
| மின்சாரம் | கிலோவாற்று மணித்தியாலம் (01) | 180 | 60 | 90 | 30 | (01) |
| பாதுகாப்பு கட்டணங்கள் | பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை (01) | 240 | 100 | 60 | 80 | (01) |
| இயந்திரங்களுக்கான பெறுமானத் தேய்வு | இயந்திரக்கிரயம் / நேரடி ஒதுக்கீடு | 250 | 90 | (01) 160 | (01) --- | |
| | | 2 720 | 960 | 1 160 | 600 | |
| களஞ்சியம் | மூலப்பொருள் வேண்டுகோள் எண்ணிக்கை | --- | (01) 360 | (01) 240 | (600) | |
| | | 2 720 | 1 320 | 1 400 | --- | |

(01)

**(12 புள்ளிகள்)**

(2) மேந்தலை உறிஞ்சல் வீதம் - ஒன்றிணைத்தல் பகுதி = **ரூ. 110** (02)

- முடிவுறுத்தல் பகுதி = **ரூ. 100** (02)

**செய்கை :**

| | **ஒன்றிணைத்தல் பகுதி** | **முடிவுறுத்தல் பகுதி** |
|---|---|---|
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | = பாதிடப்பட்ட மேந்தலைக்கிரயம் / பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம் | பாதிடப்பட்ட மேந்தலைக்கிரயம் / பாதிடப்பட்ட ஊழிய மணித்தியாலம் |
| | [01] = 1 320 000 / 12 000 [01] | [01] 1 400 000 / 14 000 [01] |
| | = ரூ. 110 | ரூ. 100 |

**(04 புள்ளிகள்)**

(3) உற்பத்திப் பொருள் ABC இன்

அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம் = **ரூ. 520** (02)

அலகொன்றுக்கான விற்பனை விலை = **ரூ. 1 080** (02)

**செய்கை:**

பொருள் ABC இன் அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம்

உறிஞ்சப்பட்ட மேந்தலைக் கிரயம் - ஒன்றிணைத்தல் பகுதி [01] (110 X 2) } [01] ரூ. 220

- முடிவுறுத்தல் பகுதி (100 X 3) ரூ. 300

ரூ. 520

**அலகொன்றுக்கான விற்பனை விலை**

| | |
|---|---|
| மூலக்கிரயம் | ரூ. 380 [01] |
| உறிஞ்சப்பட்ட மேந்தலைக்கிரயம் | ரூ. 520 |
| உற்பத்திக் கிரயம் | ரூ. 900 |
| இலாபம் (900 X 20)/100 [01] | ரூ.180 |
| விற்பனை விலை | ரூ.1 080 |

**(04 புள்ளிகள்)**

(4) உற்பத்திப் பொருள் PQR இன்

அலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம் = **ரூ. 640** (02)

அலகொன்றுக்கான மூலக்கிரயம் = **ரூ. 360** (02)

**செய்கை :**

**உற்பத்தி மேந்தலைக்கிரயம்**

| | | | |
|---|---|---|---|
| ஒன்றிணைத்தல் பகுதி | [01] (110 X 4) | [01] | 440 |
| முடிவுறுத்தல் பகுதி | (100 X 2) | | 200 |
| | | | 640 |

**செய்கை :**

**மூலக்கிரயம்**

| | | |
|---|---|---|
| பொருள் PQR இன் அலகொன்றின் விற்பனை விலை | ரூ.1 200 | |
| (–) இலாபம் $\frac{1200}{120} \times 20$ | (200) | [01] |
| அலகொன்றின் உற்பத்திக் கிரயம் | 1 000 | |
| (–) உறிஞ்சப்பட்ட மேந்தலைக்கிரயம் [01] | (640) | |
| அலகொன்றிற்கான மூலக்கிரயம் | 360 | |

**(04 புள்ளிகள்)**

| வினா இல. | (அ) | | | (ஆ) | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (1) | (2) | (3) | (4) | |
| 02 | 05 | 05 | 06 | 12 | 04 | 04 | 04 | 40 |

**3.** கமல் என்பவர் 01.04.2018 இல் வியாபாரமொன்றைத் தொடங்கினார். 31.03.2019 இலுள்ளவாறான கமல் வியாபாரத்தின் வரைபு நிதிக் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **ரூ.'000** |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கிரயத்தில் .................. | 4 500 |
| இருப்புக்கள் (கணக்கீட்டுப் பதிவுகளின் அடிப்படையில்) ............... | 600 |
| வியாபார வருமதிகள் ................................................................ | 820 |
| முற்செலுத்திய வாடகை ............................................................ | 480 |
| காசு மீதி................................................................................ | 610 |
| வியாபார கொடுக்குமதிகள் ........................................................ | 100 |
| அட்டுறு செலவுகள் ................................................................ | 90 |
| முற்பணமாகப் பெற்றவை ........................................................ | 240 |
| 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் ............... | 580 |
| 01.04.2018 இல் ஈடுபடுத்திய மூலதனம் ........................................ | 6 000 |

வியாபாரத்தின் அனைத்து காசுக் கொடுக்கல்வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றின் ஊடாகச் செய்யப்படுகின்றன.

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான வரைபு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(i) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூ. 500 000 ஆகும்.

(ii) 2019 மார்ச் மாதத்துக்கான காட்சியறை வாடகை ரூ. 80 000 ஆனது முற்செலுத்திய வாடகைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

[பக். 5 ஐப் பார்க்க

(iii) 2019 மார்ச் மாதத்துக்கான மின்சாரக் கட்டணம் ரூ. 5 000 ஆனது 31.03.2019 வரை செலுத்தப்படவோ கணக்கில் பதியப்படவோ இல்லை.

(iv) 30.03.2019 இல் ரூ. 80 000 கிரயத்தில் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படவில்லை.

(v) 30.03.2019 இல் ரூ. 200 000 கிரயமான பொருட்கள் ரூ. 400 000 காசுக்கு விற்பனை செய்யப்பட்டமை கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படவில்லை. எனினும் இதற்காகப் பெறப்பட்ட காசோலையானது 01.04.2019 இல் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

(vi) இவ்வருடத்தில் ரூ. 40 000 கிரயமான இருப்பு உருப்படிகள் அழிவடைந்துள்ளதுடன் இவ்வுருப்படிகள் விற்பனை செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை. எனினும் இவ்வுருப்படிகள் 31.03.2019 இலுள்ளவாறான இருப்புக்களில் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுக்குத் தேறக்கூடிய பெறுமதி ஒன்று காணப்படவில்லை.

(vii) வாடிக்கையாளர் ஒருவர் 40 உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்குக் கட்டளை ஒன்றை முன்வைத்துள்ளார். இப்பொருட்களுக்கான விற்பனை விலை ரூ. 240 000 ஆகக் காணப்படுவதுடன் இத்தொகையானது நடைமுறை வருடத்துள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட இத்தொகையானது முற்பணமாகப் பெற்றவை கணக்கில் பதியப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் இவற்றில் அரைவாசிப் பொருட்கள் மட்டுமே 31.03.2019 வரை வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் கிரயம் ரூ. 80 000 ஆகும். மேலும் இந்த விநியோகம் தொடர்பில் எதுவித பதிவுகளும் செய்யப்படவில்லை. மிகுதிப் பொருட்கள் அடுத்த வருடத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும்.

(viii) 28.03.2019 இல் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெற்ற ரூ. 20 000 காசோலை ஒன்று 31.03.2019 இல் வங்கியால் மறுக்கப்பட்டுள்ளமையை 03.04.2019 இல் பெறப்பட்ட வங்கிக்கூற்று வெளிப்படுத்தியுள்ளது.

(ix) மேலும் 31.03.2019 இல் வங்கியில் கடன்பட்டோர் ஒருவரினால் நேரடியாக ரூ. 50 000 காசோலை ஒன்று வைப்புச் செய்யப்பட்டுள்ளதனையும் இவ்வங்கிக்கூற்று காட்டுகிறது. இத்தொகையானது வரைபு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது மீளப்பெற முடியாத தொகையொன்றாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(x) வியாபாரத்தினால் உடைமையாளரின் பிள்ளைக்கு பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட ரூ. 2 000 ஐயும் வங்கிக்கூற்று வெளிப்படுத்துகிறது.

**வேண்டப்படுவது:**

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையிலுள்ள உருப்படிகளின் தாக்கத்தினைக் (பெறுமதிகளுடன்) காட்டுவதுடன், ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (–) எனவும் அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக.

(இவ்வினாவிற்கு விடையளிப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.)

(ரூ.'000)

| நடவடிக்கை இல. | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | முற் செலுத்திய வாடகை | காசு | வியாபார கொடுக்குமதிகள் | அட்டுறு செலவுகள் | முற்பணமாகப் பெற்றவை | |
| மீதி | 4 500 | 600 | 820 | 480 | 610 | 100 | 90 | 240 | 6 580 |
| (i) | | | | | | | | | |
| (ii) | | | | | | | | | |
| …… | | | | | | | | | |
| …… | | | | | | | | | |
| திருத்திய மீதி | | | | | | | | | |

(2) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய வரைபு இலாபத்தைக் காட்டுவதற்கான கூற்று

(3) மேலே தரப்பட்ட உருப்படிகள் (ii), (iii), (iv), (ix), (x) ஆகியவற்றைத் திருத்துவதற்கான / பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பல் உட்பட)

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 6 ஐப் பார்க்க

## வினா – 03

(1) (ரூ. 000)

| இல் | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | உரிமையாண்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி உபகரணம் | இருப்பு | வியாபார வருமதி | முற்பண வாடகை | காசு | வியாபார கொடுக்குமதிகள் | அட்டுறு செலவுகள் | முற்பணமாகப் பெற்றவைகள் | | |
| மீதி | 4 500 | 600 | 820 | 480 | 610 | 100 | 90 | 240 | 6 580 | |
| (i) | – 500 | | | | | | | | – 500 | 01 |
| (ii) | | | | – 80 | | | | | – 80 | 01 |
| (iii) | | | | | | | + 5 | | – 5 | 01 |
| (iv) | | + 80 | | | | + 80 | | | | 01 |
| (v) | | – 200 | | | + 400 | | | | + 200 | 03 |
| (vi) | | – 40 | | | | | | | – 40 | 02 |
| (vii) | | – 80 | | | | | | – 120 | + 40 | 03 |
| (viii) | | | + 20 | | – 20 | | | | | 01 |
| (ix) | | | | | + 50 | | | | + 50 | 02 |
| (x) | | | | | – 2 | | | | – 2 | 01 |
| திருத்திய மீதி | 4 000 | 360 | 840 | 400 | 1 038 | 180 | 95 | 120 | 6 243 | |

நிரல்களின் மொத்தம் கணிப்பிடப்பட்ட **இரண்டு** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **04** புள்ளிகள்

**(20 புள்ளிகள்)**

(2) **31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய வரைபு இலாபக்கூற்று** **(ரூ.'000)**

| | | | |
|---|---|---|---|
| 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கென கணிப்பிடப்பட்ட இலாபம் | | | 580 |
| கூட்டு: | பதியப்படாத விற்பனை இலாபம் (காசு) (400 – 200) | 200 (01) | |
| | பதியப்படாத விற்பனை இலாபம் (கடன்) (120 – 80) | 40 (01) | |
| | அறவிடமுடியாக்கடன் பதிவழிப்பு மீளப்பெறல் | 50 (01) | 290 |
| | | | 870 |
| கழி : | ஆதனம் பொறி மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு | 500 (01) | |
| | காட்சியறை வாடகை | 80 (01) | |
| | மின்சாரக் கட்டணம் | 5 (01) | |
| | இருப்பு அழிவு நட்டம் | 40 (01) | (625) |
| | திருத்திய தேறிய இலாபம் | | (01) 245 |

**(08 புள்ளிகள்)**

(3) **பொது நாளேடு** (ரூ.‘000)

| விபரம் | | | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| (ii) | இலாபநட்டக் க/கு (வாடகை) | வரவு | 80 | |
| | முற்செலுத்திய வாடகைக் க/கு | செலவு | (02) | 80 |
| | (முற்செலுத்திய வாடகைக் கணக்கில் பதியப்பட்டிருந்த வாடகைச் செலவு சீராக்கப்பட்டது) | | | |
| (iii) | இலாபநட்டக் க/கு (மின்சாரம்) | வரவு | 5 | |
| | அட்டுறு மின்சாரக் க/கு | செலவு | | (02) 5 |
| | (மார்ச் மாத மின்சாரக் கட்டணம் சீராக்கப்பட்டது) | | | |
| (iv) | இலாபநட்டக் க/கு (கொள்வனவு) | வரவு | 80 | |
| | வியாபாரக் கொடுக்குமதிகள் க/கு | செலவு | | (02) 80 |
| | (ஏடுகளில் பதியத்தவறிய கடன்கொள்வனவு பதியப்பட்டது) | | | |
| (ix) | காசுக் க/கு | வரவு | 50 | |
| | இலாபநட்டக் க/கு (அறவிடமுடியாக்கடன் மீளப்பெற்றது) | செலவு | | (02) 50 |
| | (அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்பட்ட வியாபார வருமதிகள் வங்கிக்கு நேரடியாகக் கிடைத்தது திருத்தப்பட்டது) | | | |
| (x) | பற்றுக் க/கு | வரவு | 2 | |
| | காசுக் க/கு | செலவு | | (02) 2 |
| | (உரிமையாளரின் காசுப் பற்று பதியப்பட்டது) | | | |

❖ **எல்லா விளம்பல்களுக்கும் மொத்தமாக 02 புள்ளிகள்**

**(12 புள்ளிகள்)**

| வினா இல. | (1) | (2) | (3) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 03 | 20 | 08 | 12 | 40 |

4. (அ) மதன் டிரேடர்ஸ் ஆனது பெறுமதிசேர் வரிக்காக (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். பின்வருவன 31.12.2018 இலுள்ளவாறான இந்நிறுவனத்தின் நிதி நிலைமைக் கூற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீதிகளாகும்.

| | ரூ. |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் ............... | 120 000 |
| காசு ............................................ | 30 000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் ......... | 70 000 |
| செலுத்தவேண்டிய VAT .............. | 30 000 |

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 31.01.2019 இல் முடிவடைந்த மாதத்தில் இந்நிறுவனத்தில் இடம்பெற்றுள்ளன.

| திகதி | கொடுக்கல்வாங்கல் |
|---|---|
| 05.01.2019 | வரையறுத்த அமலா (PVT) கம்பனியிடமிருந்து கடனுக்கு ரூ. 230 000 பொருட்கள் கொள்வனவு (இக்கொள்வனவானது ரூ. 30 000 VATஐ உள்ளடக்கியுள்ளது. |
| 10.01.2019 | ரூ. 150 000 கிரயமான பொருட்கள் ரூ. 207 000 இற்கு காசுக்கு விற்பனை (இவ்விற்பனையானது ரூ. 27 000 VATஐ உள்ளடக்கியுள்ளது.) |
| 12.01.2019 | 31.12.2018 இலுள்ளவாறான கடன்பட்டோர் மீதியின் முழுத்தொகையும் கழிவுக்கு உட்பட்டு ரூ. 110 000 பெறப்பட்டது. |
| 15.01.2019 | 31.12.2018 இலுள்ளவாறான கடன்கொடுத்தோருக்கு முழுத்தொகையும் கொடுத்துத் தீர்க்கப்பட்டது. |
| 16.01.2019 | வரையறுத்த அமலா (PVT) கம்பனிக்குக் கொடுக்க வேண்டிய தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டதுடன் ரூ. 5 000 கழிவும் பெறப்பட்டது. |
| 18.01.2019 | நாதன் டிரேடர்ஸ் இடமிருந்து ரூ. 360 000 பட்டியல் விலையுடன் கூடிய பொருட்கள் ரூ. 345 000 இற்கு கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. (இக்கொள்வனவானது ரூ. 45 000 VAT ஐ உள்ளடக்கியுள்ளது.) |
| 20.01.2019 | ஜெயம் PLC இற்கு ரூ. 350 000 கிரயம் கொண்ட பொருட்கள் ரூ. 460 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன. (இவ்விற்பனையானது ரூ. 60 000 VAT ஐ உள்ளடக்கியுள்ளது.) |
| 28.01.2019 | செலுத்திய காரியாலயச் செலவுகள் ரூ. 60 000 ஆகும். |
| 30.01.2019 | ஜெயம் PLC இடமிருந்து கிடைக்கவேண்டிய தொகையின் பகுதிக் கொடுப்பனவாக ரூ. 360 000 பெறப்பட்டது. |

செலவுகளின் மீது VAT இல்லை எனக் கருதுக.

**வேண்டப்படுவது:**

(1) 31.01.2019 இல் முடிவடைந்த மாதத்துக்கான வியாபாரத்தின் பின்வரும் மூலப் பதிவேடுகள்:
- (i) காசுப் பெறுவனவுகள் நாளேடு
- (ii) காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
- (iii) கொள்வனவு நாளேடு

(2) 31.01.2019 இல் முடிவடைந்த மாதத்துக்கான பின்வரும் கணக்குகள்:
- (i) வியாபார கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
- (ii) வியாபார கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
- (iii) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு
- (iv) காசுக் கணக்கு

**(20 புள்ளிகள்)**

[பக். 7 ஐப் பார்க்க

**(ஆ)** பின்வரும் தகவல்கள் சுஹாதா விளையாட்டுக் கழகத்தின் 2019 மார்ச் மாதத்துடன் தொடர்புடையனவாகும். இவ்விளையாட்டுக் கழகமானது இலாப நோக்கற்ற முறையில் செயற்படுகின்றது.

| **விபரம்** | **31.03.2019 இல் (ரூ.'000)** | **28.02.2019 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (கொண்டுசெல் மீதியில்) | 1 000 | 800 |
| வருமதி சந்தா | 60 | 40 |
| முற்பணமாகப் பெற்ற சந்தா | ? | 100 |
| வங்கியிலுள்ள காசு | ? | 80 |
| திரண்ட நிதி | ? | 820 |

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 31.03.2019 இல் முடிவடைந்த மாதத்தில் இவ்விளையாட்டுக் கழகத்தில் இடம்பெற்றவையாகும்.

(i) பெற்ற அங்கத்துவ சந்தா ரூ. 300 000 ஆகும். (இது மாதத் தொடக்கத்தில் கிடைக்க வேண்டிய சந்தா ரூ. 40 000 ஐயும் 2019 ஏப்ரல் மாதத்திற்காகப் பெறப்பட்ட ரூ. 70 000 இனையும் உள்ளடக்கியுள்ளது.)

(ii) இம்மாதத்தில் 14 புதிய அங்கத்தவர்கள் விளையாட்டுக்கழத்தில் இணைந்துள்ளதுடன் ஒவ்வொருவரும் நுழைவுக் கட்டணமாக ரூ. 10 000 ஐச் செலுத்தியுள்ளனர்.

(iii) 01.03.2019 இல் ரூ. 300 000 கிரயமுடைய காரியாலய உபகரணங்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

(iv) சம்பளங்களாக ரூ. 180 000 செலுத்தப்பட்டது. (31.03.2019 இலுள்ளவாறான அட்டுறு சம்பளங்கள் ரூ. 30 000 ஆகும்.)

இவ்விளையாட்டுக் கழகமானது அதன் சகல காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்கின்றது. 28.02.2019 இல் இக்கழகத்தின் காசு மீதியானது அத்திகதியிலுள்ள வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கியது. எனினும் 31.03.2019 இலுள்ள வங்கிக்கூற்று மீதியானது அத்திகதியிலுள்ள காசுக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. வங்கிக்கூற்றின்படி பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

| | ரூ. |
|---|---|
| வசூலிக்கப்பட்ட காசோலைகள் ........................................................ | 400 000 |
| கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் ........................ | 350 000 |
| வங்கியில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட நன்கொடைகள்.............. | 20 000 |
| காரியாலய வாடகைக்கான நிலையியற் கட்டளைக் கொடுப்பனவு ...... | 10 000 |

நன்கொடையாகக் கிடைத்த நேரடி வைப்புக்களும் காரியாலய வாடகைக்கான நிலையியற் கட்டளைக் கொடுப்பனவுகளும் வங்கிக்கூற்றினைப் பெற்றதன் பின்னரே காசுக் கணக்கில் பதியப்பட்டன. நன்கொடைகளும் நுழைவுக் கட்டணங்களும் அவை பெறப்பட்ட மாதத்திற்குரிய வருமானமாக இனங்காணப்படுகிறது.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2019 இல் முடிவடைந்த மாதத்துக்கான காசுக் கணக்கு

(2) 2019 மார்ச் மாதத்துக்கான வங்கி இணக்கக்கூற்று

(3) 31.03.2019 இல் முடிவடைந்த மாதத்துக்கான வருமானக் கூற்று

(4) 31.03.2019 இலுள்ளவாறான முற்பணமாகப் பெற்ற சந்தா, திரண்டநிதி

**(20 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 8 ஐப் பார்க்க

## வினா – 04

(அ) (1) (i) **காசுப் பெறுவனவு நாளேடு**

| திகதி | பே.ஃ. இல. | விபரம் | கொ. கழிவு | பெறுமதி | பகுப்பாய்வு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விற்பனை | VAT | கடன் பட்டோர் | ஏனைய வருமானம் | ஏனைய பெறுவனவு |
| 2019 01.10 | | விற்பனை | | 207 000 | 180 000 | 27 000 | | | |
| 01.12 | | கடன்பட்டோர் | 10 000 | 110 000 | | | 110 000 | | |
| 01.30 | | ஜெயம் PLC | | 360 000 | | | 360 000 | | |
| | | மொத்தம் (பொதுப் பேரேட்டுக்கு மாற்றப்பட்டது) (01) | 10 000 | 677 000 | 180 000 | 27 000 | 470 000 | --- | --- |

❖ ஏதாவது இரண்டு உருப்படிகளுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள் **05**

(ii) **காசுக் கொடுப்பனவு நாளேடு**

| திகதி | கா.ச. இல. | விபரம் | பெ. கழிவு | பெறுமதி | பகுப்பாய்வு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கொள்வனவு | VAT | கடன் கொடுத்தோர் | ஏனைய செலவுகள் | ஏனைய கொடுப்பனவு |
| 2019 01.15 | | கடன்கொடுத்தோர் | | 70 000 | | | 70 000 | | |
| 01.16 | | அமலா PVT | 5 000 | 225 000 | | | 225 000 | | |
| 01.28 | | காரியாலயச் செலவு | | 60 000 | | | | 60 000 | |
| | | மொத்தம் (பொதுப் பேரேட்டுக்கு மாற்றப் பட்டது) (01) | 5 000 | 355 000 | --- | ---- | 295 000 | 60 000 | --- |

❖ ஏதாவது இரண்டு உருப்படிகளுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 03 புள்ளிகள் **04**

(iii) **கொள்வனவு நாளேடு**

| திகதி | பட். இல. | வழங்குநர் | பெறுமதி | VAT | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 05.01.2019 | | அமலா PVT | 200 000 | 30 000 | 230 000 |
| 18.01.2019 | | நாதன் டிரேடர்ஸ் | 300 000 | 45 000 | 345 000 |
| | | மொத்தம் (பொது பேரேட்டுக்கு மாற்றப்பட்டது) | 500 000 | 75 000 | 575 000 |

❖ ஏதாவது மூன்று உருப்படிகளுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 02 புள்ளிகள் **02**

**(11 புள்ளிகள்)**

(2) (i) **வியாபார கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 120 000 | காசு | 470 000 |
| விற்பனை | 400 000 | கொடுத்த கழிவு | 10 000 |
| VAT கட்டுப்பாடு | 60 000 | மீ.செ. | 100 000 |
| | 580 000 | | 580 000 |

❖ ஏதாவது **மூன்று** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **02** புள்ளிகள்

(ii) **வியாபார கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 295 000 | மீதி | 70 000 |
| பெற்ற கழிவு | 5 000 | கொள்வனவு | 500 000 |
| மீ.செ. | 345 000 | VAT கட்டுப்பாடு | 75 000 |
| | 645 000 | | 645 000 |

❖ ஏதாவது **மூன்று** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **02** புள்ளிகள்

(iii) **VAT கட்டுப்பாட்டுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| க.கொ.கட்டுப்பாட்டு க/கு | 75 000 | மீதி | 30000 |
| மீ.செ. | 42 000 | விற்பனை | 27000 |
| | | க.ப. கட்டுப் பாட்டு க/கு | 60000 |
| | 117 000 | | 117 000 |

❖ ஏதாவது **இரண்டு** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **02** புள்ளிகள்

(iv) **காசுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 30 000 | க.கொ. கட்டுப்பாட்டு க/கு | 295 000 |
| விற்பனை | 180 000 | ஏனைய செலவுகள் | 60 000 |
| க.ப. கட்டுப்பாட்டு க/கு | 470 000 | மீ.செ. | 352 000 |
| VAT கட்டுப்பாடு | 27 000 | | |
| | 707 000 | | 707 000 |

❖ ஏதாவது **இரண்டு** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **03** புள்ளிகள்

**(09 புள்ளிகள்)**

(ஆ) (1) **காசுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ.வ. | 80 | காரியாலய உபகரணம் | 300 |
| சந்தா | 300 | சம்பளம் | 180 |
| நுழைவுக்கட்டணம் | 140 | காரியாலய வாடகை | 10 |
| பெற்ற நன்கொடை | 20 | மீ.செ. | 50 |
| | 540 | | 540 |

❖ **கணிப்பிடப்பட்ட இறுதி மீதி உட்பட இரண்டு உருப்படிகளுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்**

**(04 புள்ளிகள்)**

(2) **2019 மார்ச் மாதத்திற்கான வங்கி இணைக்கக்கூற்று** (ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| சீராக்கிய காசேட்டு மீதி | (01) | 50 | |
| (+) மாற்றப்படாத காசோலை | | 130 | (02) |
| | | 180 | |
| (–) வசூலிக்கப்படாத காசோலை | | (40) | (02) |
| 30.03.2019 இல் வங்கிக்கூற்றின்படி மீதி | (01) | 140 | |

**(06 புள்ளிகள்)**

(3) சுஹாதா விளையாட்டுக் கழகம்

31.03.2019 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று (ரூ.'000)

| | | |
|---|---|---|
| **வருமானம் :** | | |
| சந்தா | 350 (02) | |
| நுழைவுக்கட்டணம் | 140 } (01) | |
| பெற்ற நன்கொடைகள் | 20 | 510 |
| **செலவுகள் :** | | |
| ஆதனம் பொறி உபகரணத் தேய்வு | 100 (02) | |
| சம்பளம் | 210 (01) | |
| காரியாலய வாடகை | 10 (01) | (320) |
| மிகை | | (01) 190 |

**(08 புள்ளிகள்)**

**செய்கை :**

சந்தாக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ.வ. | 40 | மீ.வ. | 100 |
| வருமானச் செலவுக் க/கு | 350 | காசு | 300 |
| மீ.செ. | 70 | மீ.செ. | 60 |
| | 460 | | 460 |

ஆதனம் பொறி மற்றும் உபகரண க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ.வ. | 800 | பெறுமானத் தேய்வு | 100 |
| காசு | 300 | மீ.செ. | 1000 |
| | 1100 | | 1100 |

❖ ஏதாவது **மூன்று** உருப்படி களுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 02 புள்ளிகள்

❖ ஏதாவது **இரண்டு** உருப்படி களுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 02 புள்ளிகள்

(4) 31.03.2019 இல் உள்ளவாறான முற்பணமாகப் பெற்ற சந்தா = **ரூ. 70 000** (01)

31.03.2019 இல் உள்ளவாறான திரண்டநிதி = (01) **ரூ. 1 010 000**

**செய்கை : (ரூ.'000)**

| | |
|---|---|
| திரண்டநிதி | 820 |
| (+) மிகை | 190 |
| | 1 010 |

**(02 புள்ளிகள்)**

| வினா இல. | (அ) | | (ஆ) | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 04 | (1) | (2) | (1) | (2) | (3) | (4) | 40 |
| | 11 | 09 | 04 | 06 | 08 | 02 | |

**5.** **(அ)** நதியா, கங்கா ஆகியோர் சிறப்புச் சந்தை ஒன்றை நடாத்துவதற்கு 01.04.2018 இல் பங்குடைமை உடன்படிக்கை ஒன்றினைச் செய்துள்ளனர். அதேநாளில் அவர்கள் பின்வரும் சொத்துக்களை தமது மூலதனமாக வியாபாரத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்:

| | நதியா (ரூ.'000) | கங்கா (ரூ.'000) |
|---|---|---|
| காணி | 1 500 | – |
| கட்டடங்கள் | 1 000 | 1 000 |
| காரியாலய உபகரணங்கள் | – | 1 000 |
| காசு | 500 | – |

பங்குடைமை உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்வருமாறு காணப்பட்டன:

※ பங்காளரிடையே இலாப நட்டமானது 01.04.2018 இல் அவர்களால் ஈடுபடுத்தப்பட்ட மூலதன விகிதத்தில் பகிரப்படும்.

※ பங்குடைமையின் ஆரம்பத் திகதியிலிருந்து வருடத்தின் முதல் ஆறு மாதங்களுக்கு ஒவ்வொரு பங்காளரும் மாதாந்த சம்பளமாக ரூ. 50 000 இற்கும் அதன் பின்னர் ரூ. 60 000 மாதாந்த சம்பளத்துக்கும் உரித்துடையவர் ஆவர்.

※ பங்காளர்கள் பங்குடைமைக்கு வழங்கிய கடனுக்கு 8% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்கள்.

※ வியாபாரத்தில் நன்மதிப்புக் கணக்கினைப் பராமரிக்காது பங்காளரின் மூலதனக் கணக்கினூடாகப் பங்குடைமையின் நன்மதிப்புச் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

வியாபாரத்தின் 31.03.2019 இலுள்ளவாறு சுருக்கிய பரீட்சை மீதி பின்வருமாறு:

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| விற்பனைகள் ........................................ | | 5 000 |
| விற்ற சரக்கின் கொள்விலை .............................. | 1 800 | |
| 31.03.2019 இல் இருப்புக்கள் ............................ | 400 | |
| செயற்பாட்டுச் செலவுகள் ................................ | 1 200 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்............. | 4 500 | |
| பெறுமானத்தேய்வு........................................ | 200 | |
| திரண்ட பெறுமானத் தேய்வு .............................. | | 200 |
| 01.01.2019 இல் நதியாவால் வழங்கப்பட்ட கடன் | | 1 500 |
| செலுத்திய காப்புறுதிக் கட்டுப்பணம் .................. | 500 | |
| பங்காளர்களுக்குச் செலுத்திய சம்பளங்கள்: | | |
| நதியா ........................................................ | 300 | |
| கங்கா ........................................................ | 500 | |
| மூலதனக் கணக்குகள்: | | |
| நதியா ........................................................ | | 3 000 |
| கங்கா ........................................................ | | 2 000 |
| சாரங்கனால் கொடுக்கப்பட்ட காசு ...................... | | 1 500 |
| காசு ............................................................. | 3 800 | |
| | **13 200** | **13 200** |

**மேலதிக தகவல்கள்:**

(i) இவ்வருடத்தில் வியாபாரத்திலிருந்து ரூ. 80 000 கிரயமுடைய பொருட்களை நதியா எடுத்துள்ளார். இது வியாபாரத்தின் கணக்குப் புத்தகங்களில் பதியப்படவில்லை.

[பக். 9 ஐப் பார்க்க

(ii) கங்கா, தனது தனிப்பட்ட காசைப் பயன்படுத்தி கொள்வனவு செய்த ரூ. 400 000 கிரயமுடைய பொருட்கள் பங்குடைமைக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்பொருட்களின் கிரயத்தை வியாபாரத்துக்கான கங்காவின் மூலதனப் பங்களிப்பாகக் கருதுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இவை தொடர்பாக புத்தகங்களில் எதுவித பதிவுகளும் செய்யப்படவில்லை. எனினும், இப்பொருட்கள் அனைத்தும் இவ்வருடத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் விற்பனைக் கணக்கிலும் பதியப்பட்டுள்ளன.

(iii) நதியா வழங்கிய கடனுக்கான வட்டியானது செலுத்தப்படவோ அல்லது கணக்கில் பதியப்படவோ இல்லை.

(iv) கங்காவின் ரூ. 65 000 தொகையான தனிப்பட்ட வருமானவரியானது வியாபாரத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. இது வியாபாரத்தின் செயற்பாட்டுச் செலவாகப் பதியப்பட்டுள்ளது.

(v) வியாபாரத்தினால் செலுத்திய காப்புறுதிக் கட்டுப்பணத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு:

* சிறப்புச் சந்தைக்கான தீக்காப்புறுதி - ரூ. 300 000
* நதியாவின் ஆயுள் காப்புறுதி - ரூ. 200 000

(vi) 31.03.2019 இல் சாரங்கன் இவ்வியாபாரத்தில் ஒரு பங்காளராக அனுமதிக்கப்பட்டார். அவர் பங்குடைமைக்கு ரூ. 1 500 000 ஐ மூலதனமாக இட்டதுடன் இது தனியான கணக்கொன்றில் பதியப்பட்டுள்ளது. புதிய இலாப நட்டப் பகிர்வு வீதமானது நதியா, கங்கா, சாரங்கன் ஆகியோருக்கிடையில் முறையே 3 : 2 : 1 ஆகும். இத் திகதியில் வியாபாரத்தின் நன்மதிப்பானது ரூ. 600 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் கணக்குகளில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடைமையின் வருமானக் கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)

(2) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் மூலதனக் கணக்குகளும் நடைமுறைக் கணக்குகளும்

**(20 புள்ளிகள்)**

**(ஆ)** பாடசாலை ஒன்று அதன் ஆசிரியர்களுக்கான வருடாந்த சுற்றுலாவொன்றைத் திட்டமிடுகின்றது. அப்பாடசாலையின் கணக்கீட்டுப் பாட ஆசிரியரால் சுற்றுலா தொடர்பாக மதிப்பிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஆசிரியர் ஒருவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய கட்டணம் | ரூ. 1 500 |
| 40 ஆசனங்களைக் கொண்ட பேருந்து ஒன்றுக்கான வாடகைக் கட்டணம் | ரூ. 40 000 |
| பேருந்து ஒன்றுக்கான சாரதி, உதவியாளருக்கான கொடுப்பனவு | ரூ. 2 000 |
| ஆசிரியர் ஒருவருக்கான உபசரணைச் செலவுகள் | ? |
| மொத்த கிரயத்தை ஈடுசெய்வதற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை | 100 |
| சுற்றுலாவுக்கு எதிர்பார்க்கப்படும் ஆகக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை | 120 |

ஒரு பேருந்தில் பயணிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிலுள்ள ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

(1) சுற்றுலாவுக்கான மொத்த நிலையான கிரயம்

(2) ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு

(3) ஆசிரியர் ஒருவருக்கான உபசரணைச் செலவு

(4) சுற்றுலாவுக்கான பாதுகாப்பு எல்லை (எண்ணிக்கை, ரூபா பெறுமதியில்)

(5) எதிர்பார்க்கப்படும் ஆகக்கூடிய எண்ணிக்கையான ஆசிரியர்கள் பங்குபற்றினால் சுற்றுலாவின் மூலம் பெறப்படும் மிகை

(6) 90 ஆசிரியர்கள் மாத்திரம் பங்குபற்றுவார்களாயின் மொத்தக் கிரயத்தை ஈடு செய்வதற்காக ஆசிரியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய கட்டணம்

**(20 புள்ளிகள்)**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 10 ஐப் பார்க்க

## வினா – 05

### நதியா, கங்கா பங்குடமை

(அ) (1) **31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று**

(ரூ. 000)

| | | |
|---|---|---|
| விற்பனை | | 5 000 |
| (–) விற்பனைக் கிரயம் | | (2 120) (02) |
| மொத்த லாபம் | | 2 880 |
| **கழிக்குக :** | | |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1 135 (01) | |
| காப்புறுதிக் கட்டணம் | 300 (01) | |
| பெறுமானத் தேய்வு | 200 | |
| நதியா கடன் வட்டி | 30 (01) | (1 665) |
| தேறிய இலாபம் | | 1 215 |
| (–) பகிர்வுகள் | | |
| பங்காளர் சம்பளம் நதியா | 660 (01) | |
| கங்கா | 660 | (1 320) |
| | | (105) |
| நட்ட பகிர்வு நதியா | (01) 63 | |
| கங்கா | 42 | 105 |
| | | -- |

**(07 புள்ளிகள்)**

**செய்கை :**

விற்பனைக்கிரயம்

| | | |
|---|---|---|
| விற்பனைக் கிரயம் | 1 800 | |
| கொள்வனவு | 400 | 01 |
| பொருள் பற்று நதியா | (80) | 01 |
| | 2 120 | |

(2) **பங்காளர் மூலதனக் கணக்கு** (ரூ. 000)

| விபரம் | நதியா | கங்கா | சாரங்கன் | விபரம் | நதியா | கங்கா | சாரங்கன் |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 300 | 200 | 100 (01) | காணி | * 1 500 | | |
| | | | | கட்டடம் | * 1 000 | * 1 000 | |
| மீ.செ. | 3 060 | 2 440 | 1 400 | காரியாலய உபகரணம் | | * 1 000 | |
| | | | | காசு | * 500 | | |
| | | | | சாரங்கன் கொண்டு வந்த காசு | | | 1 500 (01) |
| | | | | கொள்வனவு | | 400 (01) | |
| | | | | நன்மதிப்பு | 360 | 240 (01) | |
| | 3 360 | 2 640 | 1 500 | | 3 360 | 2 640 | 1 500 |

* ஏதாவது **நான்கு** விடயங்களுக்கு மொத்தம் **02** புள்ளிகள்

**பங்காளர் நடைமுறைக் கணக்கு** (ரூ. 000)

| விபரம் | நதியா | கங்கா | விபரம் | நதியா | கங்கா |
|---|---|---|---|---|---|
| பற்றுக்கள் | 80 | (01) | கடன் வட்டி | (01) 30 | |
| வருமானவரி | | 65 (01) | சம்பளம் | (01) 660 | 660 |
| ஆயுள் காப்புறுதி | 200 (01) | | | | |
| சம்பளம் | 300 | 500 (01) | | | |
| நட்டம் | (01) 63 | 42 | | | |
| மீ.செ. | 47 | 53 | | | |
| | 690 | 660 | | 690 | 660 |

**(13 புள்ளிகள்)**

(ஆ) (1) மொத்த நிலையான கிரயம் = **ரூ. 126 000** (03)

செய்கை :

| | | | | |
|---|---|---|---|---|
| பேருந்து வாடகைக் கட்டணம் | (40000 X 3) | = | 120 000 | 01 |
| சாரதி மற்றும் உதவியாளர் கொடுப்பனவு | (2000 X 3) | = | 6000 | 01 |
| | | | 126000 | |

**(03 புள்ளிகள்)**

(2) ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு = **ரூ. 1 260** (03)

செய்கை :

அலகு ஒன்றிற்கான பங்களிப்பு = $\frac{126\ 000\ [01]}{100\ [01]}$ = ரூ. 1 260

**(03 புள்ளிகள்)**

(3) ஆசிரியர் ஒருவருக்கான உபசரணைச் செலவு = **ரூ. 240** (03)

செய்கை :

ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு = ஆசிரியர் ஒருவரிடம் அறவிடப்படவேண்டிய கட்டணம் – ஆசிரியர் ஒருவருக்கான உபசரணைச் செலவு

1 260 = 1 500 – ஆசிரியர் ஒருவருக்கான உபசரணைச் செலவு

ஆசிரியர் ஒருவருக்கான உபசரணைச் செலவு = 1 500 [01] – 1 260 [01]

= ரூ. 240

**(03 புள்ளிகள்)**

(4) சுற்றுலாவுக்கான பாதுகாப்பு எல்லை (எண்ணிக்கை) = **20 ஆசிரியர்கள்** (02)

சுற்றுலாவுக்கான பாதுகாப்பு எல்லை (பெறுமதி) = ரூ. **30 000** (02)

செய்கை :

பாதுகாப்பு எல்லை (எண்ணிக்கை) = எதிர்பார்க்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை – சமப்பாட்டுப்புள்ளி ஆசிரியர் எண்ணிக்கை

= 120 [01] – 100 [01]

= 20

பாதுகாப்பு எல்லை (பெறுமதி) = பாதுகாப்பு எல்லை ஆசிரியர்களின் எண்ணிக்கை X ஆசிரியர் ஒருவரிடம் அறவிடப்படும் கட்டணம்

= 20 [01] X 1 500 [01]

= ரூ. 30 000

**அல்லது**

பாதுகாப்பு எல்லை (பெறுமதி) = எதிர்பார்க்கப்பட்ட வருமானம் − சமப்பாட்டுப்புள்ளி வருமானம்

= 180 000 [01] − 150 000 [01]

= ரூ. 30 000

**(04 புள்ளிகள்)**

(5) எதிர்பார்க்கப்படும் ஆகக்கூடிய எண்ணிக்கையான ஆசிரியர்கள் பங்குபற்றினால் சுற்றுலாவின் மூலம் பெறப்படும் மிகை = ரூ. **25 200** (03)

செய்கை :

எதிர்பார்க்கப்படும் மிகை = மொத்த பங்களிப்பு − நிலையான கிரயம்

= [01] 151 200 − [01] 126 000

= ரூ. 25 200

**அல்லது**

எதிர்பார்க்கப்படும் மிகை = பாதுகாப்பு எல்லை எண்ணிக்கை X ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு

= 20 [01] X 1260 [01]

= ரூ. 25 200

**(03 புள்ளிகள்)**

(6) 90 ஆசிரியர்கள் மாத்திரம் பங்குபற்றுவார்களாயின் மொத்தக் கிரயத்தை ஈடு செய்வதற்காக ஆசிரியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணம் = ரூ. **1 640** (04)

செய்கை :

ஆசிரியரிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணம் $= \dfrac{\text{மொத்த நிலையான கிரயம்} + \text{மொத்த மாறும் கிரயம்}}{\text{பங்குபற்றுவோர் எண்ணிக்கை}}$

$= \dfrac{[01]\ 126\ 000 + [01]\ 21\ 600}{90\ [01]}$

= ரூ. 1 640

அல்லது

பங்குபற்றுவோர் எண்ணிக்கை $= \dfrac{\text{மொத்த நிலையான கிரயம்}}{\text{ஆசிரியரிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணம்} - \text{ஆசிரியர் ஒருவருக்கான மாறும் கிரயம்}}$

[01] 90 $= \dfrac{[01]\ 126\ 000}{\text{ஆசிரியரிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணம்} - 21\ 600\ [01]}$

ஆசிரியரிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணம் $= \dfrac{126\ 000 - 21\ 600}{90}$

= ரூ. 1 640

**(04 புள்ளிகள்)**

| வினா இல. | (அ) | | (ஆ) | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05 | (1) | (2) | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | 40 |
| | 07 | 13 | 03 | 03 | 03 | 04 | 03 | 04 | |

6. (அ) பின்வருன அனுராதா PLC இன் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடைய தகவல்களாகும்.

| | ரூ.'000 |
|---|---|
| விற்பனை வருமானம் ........................ | 9 000 |
| வருடத்திற்கான இலாபம் .................. | 600 |
| வருமானவரிச் செலவுகள் ................. | 40 |
| வட்டிச் செலவுகள் ............................ | 80 |

மேலும் 31.03.2019 இல் பின்வரும் மீதிகளும் கிடைக்கப்பெற்றன.

| | ரூ.'000 |
|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (வழங்கிய பங்குகளின் மொத்த எண்ணிக்கை 150 000) ...... | 4 200 |
| மொத்தச் சொத்துக்கள் .................................................................................................. | 8 400 |

01.04.2018 இல் மொத்தச் சொத்துக்களும் நிறுத்தி வைத்த வருவாய்களும் முறையே ரூ. 6 600 000, ரூ. 1 200 000 ஆகும். 31. 03. 2019 இலுள்ளவாறு கம்பனியின் பொறுப்புக்கள் நீண்டகாலக் கடன்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளதாகக் கருதுக.

**வேண்டப்படுவது:**

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வரும் **விகிதங்களைக்** கணிக்குக:

(1) தேறிய இலாபம்
(2) வட்டிக் காப்பு
(3) உரிமையாண்மை மீதான திரும்பல்
(4) பங்கொன்றிற்கான உழைப்புக்கள்
(5) உரிமையாண்மையில் கடன் **(10 புள்ளிகள்)**

(ஆ) கமலா PLC ஆனது பழைய இயந்திரமொன்றைப் பிரதியீடு செய்து புதிய இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கின்றது. கம்பனியின் முகாமைக் கணக்காளர் புதிய இயந்திரம் தொடர்பில் பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழங்கியுள்ளார்.

| | |
|---|---|
| கொள்வனவு விலை | ரூ. 1 200 000 |
| பயன்தரு ஆயுட்காலம் | 5 வருடங்கள் |
| எஞ்சிய பெறுமதி | ரூ. 200 000 |
| நிறுவுதற் கட்டணங்கள் | ரூ. 75 000 |
| இடத்தினைத் தயார்ப்படுத்தலுக்கான செலவுகள் | ரூ. 125 000 |
| வருடாந்த பராமரிப்புக் கிரயம் | ரூ. 100 000 |

**மேலதிக தகவல்கள்:**

(i) புதிய இயந்திரத்துக்குரிய மேலதிக தொழிற்படு மூலதனத்துக்கான தேவைப்பாடு ரூ. 300 000 ஆகும். இது இச்செயற்றிட்டத்தின் இறுதிக் காலத்தில் மீளப்பெறப்படும்.

(ii) புதிய இயந்திரத்தின் காரணமாக செயற்பாட்டுக் கிரயத்தில் எதிர்பார்க்கப்படும் வருடாந்த சேமிப்புக்கள் ரூ. 500 000 ஆகும்.

(iii) புதிய இயந்திரமானது பெற்றுக்கொள்ளப்படுமாயின், பழைய இயந்திரத்தை செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் ரூ. 400 000 இற்கு விறபனை செய்ய முடியுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(iv) இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்படும் திரும்பல் வீதம் 12% ஆகும்.

(v) கழிவீட்டுக் காரணிகள் 12% இல் :

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| **கழிவீட்டுக் காரணி** | 0.89 | 0.80 | 0.71 | 0.64 | 0.57 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் காசு உட்பாய்ச்சல்கள், காசு வெளிப்பாய்ச்சல்களின் அட்டவணையும் அதன் தேறிய நிகழ்காலப் பெறுமதியும்

(2) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வது தொடர்பிலான சிபாரிசு **(10 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க

**(இ)** நிர்மலா PLC இன் சில சொத்துக்கள், பொறுப்புக்களின் மீதிகள் பின்வருமாறு.

| **விபரம்** | **31.03.2019 இல் (ரூ.)** | **31.03.2018 இல் (ரூ.)** |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | 250 000 | 180 000 |
| வியாபார கொடுக்குமதிகள் | 110 000 | 140 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் சென்மதி | 15 000 | – |
| காசும் காசுக்குச் சமமானவையும் | ? | 120 000 |

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தில் இக்கம்பனியில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

(i) இவ்வருடத்துக்கான மொத்த விற்பனைகள், கொள்வனவுகள் ஆகியன முறையே ரூ. 1 200 000, ரூ. 550 000 ஆக இருந்தன. (எல்லா கொள்வனவுகளும் விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.)

(ii) இவ்வருடத்தில் வியாபாரக் கடன்பட்டோருக்கு அனுமதித்த காசுக் கழிவுகள் ரூ. 30 000 ஆகும்.

(iii) ரூ. 35 000 பெறுமானத்தேய்வு உட்பட இவ்வருடத்துக்கான மொத்த செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 95 000 ஆகும்.

(iv) இவ்வருடத்துக்கான வட்டி, வருமானவரிச் செலவுகள் ஆகியன முறையே ரூ. 25 000, ரூ. 65 000 ஆக இருந்தன. இவ்வருடத்தில் செலுத்திய வட்டி, செலுத்திய வருமானவரி ஆகியன முறையே ரூ. 20 000, ரூ. 75 000 ஆக இருந்தன.

(v) இவ்வருடத்தில் செலுத்திய மொத்த இடைக்காலப் பங்கிலாபம் ரூ. 60 000 ஆகும்.

(vi) இவ்வருடத்தில் கம்பனியானது 30 000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூ. 20 இல் வழங்கியது. இப்பங்கு வழங்கலானது ரூ. 200 000 ஒதுக்கம் மூலதனமாக்கப்பட்டமையை உள்ளடக்கியுள்ளது. வழங்கிய மிகுதிப் பங்குகளுக்காகக் கிடைக்க வேண்டிய காசானது இவ்வருடத்தில் பெறப்பட்டுள்ளது.

(vii) கம்பனியானது நீண்டகாலக் கடனின் பகுதிக் கொடுப்பனவாக ரூ. 220 000 ஐ இவ்வருடத்தில் செலுத்தியுள்ளது.

(viii) 01.04.2018 இல் கம்பனியானது புதிய மோட்டார் வாகனமொன்றை காசுக்குக் கொள்வனவு செய்துள்ளதுடன் அதே தினத்தில் காரியாலய உபகரணமொன்றை ரூ. 80 000 இலாபத்துடன் ரூ. 250 000 காசுக்கு விற்பனை செய்துள்ளது. இக் கொடுக்கல்வாங்கல்கள், பெறுமானத்தேய்வு ஆகியவற்றின் தேறிய விளைவின் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டு செல் மீதியானது இவ்வருடத்தில் ரூ 205 000 ஆல் அதிகரித்துள்ளது.

**வேண்டப்படுவது:**

LKAS 7 (காசுப் பாய்ச்சற் கூற்று) இன்படி 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப் பாய்ச்சற் கூற்று (செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்களை இனங்காண்பதற்காக நேர் முறையினைப் பயன்படுத்துக.)

**(20 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

* * *

## வினா – 06

(அ) (1) தேறிய இலாப விகிதம் = **6.67% அல்லது 7%** (02)

**செய்கை :**

தேறிய இலாப விகிதம் = $\frac{\text{வருடத்திற்கான இலாபம்}}{\text{விற்பனை}}$ X 100

= $\frac{600 \ [01]}{9\,000 \ [01]}$ X 100

= 6.67% அல்லது 7%

(2) வட்டிக் காப்பு விகிதம் = **9 தடவைகள்** (02)

**செய்கை :**

வட்டிக் காப்பு விகிதம் = $\frac{\text{வரிக்கு முன் இலாபம் + வட்டி}}{\text{வட்டி}}$

= $\frac{640 + 80 \ [01]}{80 \ [01]}$

= 9 தடவை

(3) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் = **10%** (02)

**செய்கை :**

உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் = $\frac{\text{வருடத்திற்கான இலாபம்}}{\text{உரிமையாண்மை}}$ X 100

= $\frac{600 \ [01]}{6\,000 \ [01]}$ X 100

= 10%

(4) பங்கொன்றிற்கான உழைப்பு = **ரூ. 4** (02)

**செய்கை :**

பங்கொன்றிற்கான உழைப்பு = $\frac{\text{வருடத்திற்கான இலாபம்}}{\text{சாதாரண பங்குகளின் எண்ணிக்கை}}$

= $\frac{600 \ [01]}{150 \ [01]}$

= ரூ. 4

(5) உரிமையாண்மையில் கடன் விகிதம் = **40% அல்லது 0.4** (02)

**செய்கை :**

உரிமையாண்மையில் கடன் விகிதம் = $\frac{\text{கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}}$ X 100

= $\frac{2\,400 \ [01]}{6\,000 \ [01]}$

= 40% / 0.4

**(10 புள்ளிகள்)**

(ஆ) (1) **செயற்றிட்ட காசு உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் அட்டவணை** (ரூ. 000)

| காசுப்பாய்ச்சல் | வருடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **0** | **1** | **2** | **3** | **4** | **5** |
| **காசு உட்பாய்ச்சல்** | | | | | | |
| பழைய இயந்திர விற்பனை | 400 (01) | | | | | |
| மேலதிக தொழிற்படு மூலதனம் மீளப்பெறல் | | | | | | 300 (01) |
| செயற்பாட்டு கிரயத்தின் சேமிப்பு | | 500 | 500 | 500 | 500 | 500 |
| எஞ்சிய பெறுமதி | | | | (01) | | 200 (01) |
| **மொத்த காசு உட்பாய்ச்சல்** | **400** | **500** | **500** | **500** | **500** | **1 000** |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள்** | | | | | | |
| கொள்வனவு விலை | (1 200) | | | | | |
| நிறுவுதல் கட்டணம் | (75) (01) | | | | | |
| இடத்தினைத் தயாரப்படுத்தல் செலவு | (125) | | | | | |
| மேலதிக தொழிற்படு மூலதனம் | (300) (01) | | | | | |
| வருடாந்த பராமரிப்புக் கிரயம் | | (100) | (100) | (100) | (100) | (100) |
| **மொத்த காசு வெளிப்பாய்ச்சல்** | **(1700)** | **(100)** | **(100)** | (01) **(100)** | **(100)** | **(100)** |
| வருடாந்த தேறிய காசுப்பாய்ச்சல் | (1 300) | 400 | 400 | 400 | 400 | 900 |

தேறிய நிகழ்காலப்பெறுமதி = **ரூ. + 429 000** (02)

**செய்கை :**

| வருடம் | தேறிய காசுப் பாய்ச்சல் | கழிவுக் காரணி | கழிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் |
|---|---|---|---|
| 0 | (1 300) | 1.0 | (1 300) |
| 1 | 400 | 0.89 | 356 |
| 2 | 400 | 0.80 | 320 |
| 3 | 400 | 0.71 | 01 284 |
| 4 | 400 | 0.64 | 256 |
| 5 | 900 | 0.57 | 513 |
| NPV | | | **+ 429** |

**(09 புள்ளிகள்)**

(2) சிபார்சு : தேறிய நிகழ்காலப்பெறுமதி நேர்க்கணியமாக இருப்பதனால் புதிய இயந்திரத்தினைக் கொள்வனவு செய்ய முடியும். (01)

**(01 புள்ளிகள்)**

(இ)

## நிர்மலா PLC இன்
## 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல்கூற்று (ரூ. 000)

| | | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற காசு | 1 100 | (02) |
| வழங்குநர்களுக்கும் செயற்பாட்டுச் செலவுகளுக்கும் கொடுத்த காசு (580 + 45) | (625) | (04) |
| செயற்பாட்டில் உருவான காசு | 475 | |
| கழி. : செலுத்திய வட்டி | (20) | (01) |
| செலுத்திய வருமான வரி | (75) | (01) |
| **செயற்பாட்டு நடவடிக்கை மூலம் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** (01) | | 380 |
| **முதலீட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் விற்பனை | 250 | (01) |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் கொள்வனவு | (410) | (03) |
| **முதலீட்டு நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** (01) | | (160) |
| **நிதியிடல் நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| சாதாரண பங்கு வழங்கல் | 400 | (01) |
| செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் | (60) | (01) |
| நீண்டகாலக்கடன் மீளச் செலுத்தியது | (220) | (01) |
| **நிதியிடல் நடவடிக்கை மூலம் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** (01) | | 120 |
| காசும் காசுக்கு சமனானவற்றின் தேறிய அதிகரிப்பு | (01) | 340 |
| 01.04.2018 இல் காசும் காசுக்குச் சமனானவையும் | | 120 |
| 31.03.2019 இல் காசும் காசுக்குச் சமனானவையும் | | (01) 460 |

**(20 புள்ளிகள்)**

**செய்கை :**

ஆதனம் பொறி மற்றும் உபகரண க/கு (ரூ. 000)

| | | | | |
|---|---|---|---|---|
| காசு | 410 | பெறுமானத் தேய்வு | 35 | (01) |
| | | காரியாலய உபகரண விற்பனை | 170 | (01) |
| | | கொண்டுசெல் மீதி அதிகரிப்பு | 205 | (01) |
| | 410 | | 410 | |

செயற்பாட்டு செலவு க/கு (ரூ. 000)

| | | | | |
|---|---|---|---|---|
| பெறுமானத் தேய்வு | 35 | [01] | இலாப நட்ட க/கு | 95 |
| காசு | 45 | | | |
| சென்மதி செயற்பாட்டுச் செலவு | 15 | [01] | | |
| | 95 | | | 95 |

**செய்கை:**

| வியாபார வருமதிகள் க/கு (ரூ. 000) | | | | | வியாபார கொடுக்குமதிகள் க/கு (ரூ. 000) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீ.வ | 180 | அனுமதித்த கழிவு | 30 | | காசு | 580 | மீ.வ. | 140 |
| விற்பனை | 1200 | காசு | 1 100 | | மீ.செ. | 110 | கொள்வனவு | 550 |
| | | மீ.செ. | 250 | | | 690 | | 690 |
| | 1380 | | 1380 | | | | | |

**இரண்டு** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **02** புள்ளிகள்

**இரண்டு** உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் மொத்தம் **02** புள்ளிகள்

| வினா இல. | (அ) | (ஆ) (1) | (ஆ) (2) | (இ) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 06 | 10 | 09 | 01 | 20 | 40 |